

பொதுவியற் றிணை

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௭	மெய்கண்டான்யாண்டு-௭௱௭ கார்த்திகைத்திங்கள் 1929௵ நவம்பர்—டிசம்பர்௴	பரல் ௧௧

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ வறுபதம்பண் பாட
வணிமயில்க ணடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலயநல்லூர் காணே.

சுந்தரர்.

உரை:

குரும்பை, தெங்கின் இளங்காய். குறிப்பினொடு மென்றது, கம்பை யாற்றின்கண் வழிபாடு செய்யும் உமைப் பிராட்டியாரை வெள்ளம் பெருக்கிச் சோதனை செய்யுங் குறிப்பென்க. ‘குண’மென்பது, அவ் வெள்ளத்திற் பாதுகாத்தற் பொருட்டுப் பெருமானை அம்மையார் அணைந்து தழுவிய வியல்பு: வரம், அறஞ்செய்ய வேண்டுமென்னும் வரம். வேட்டு, விரும்பி; ஈண்டுப் பாகங்கொண்டதென்னுந் திருமணக்

குறிப்பை யுணர்த்திற்று. சுரும்பு, ஆண்வண்டு; அருவல், மெல்ல மெல்ல நெருங்கிச் செல்லல். அறுபதம், வண்டு; இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இங்குப் பெட்டை வண்டினைக் குறித்தது. குவளை குவியுங் காலைநேரத்திற் கமலம் மலருமாகலின், 'கருங் குவளை கண்வளருங் கழனிக் கமலங்கண் முகமலரும்' என்றருளிச் செய்தார். இஃது உவமவுருவகவணி. கருங்குவளை கண்வளரு மென்பதும், கமலங்கண் முகமலரு மென்பதும் முறையே வீடுபேற்றுயிரின் அறியாமை யொடுக்கத்தையும் அறிவின் பெருக்கத்தையும் உணர்த்தும் இறைச்சிப் பொருளளவாய் வந்தமை அறிந்து மகிழற்பாலது. 'கண்ணுதலோன் மேவிய வூர் வினவில், அது கலய நல்லூர்காண்' என்று கொள்க; 'அது'வென வொன்று இசையெச்சமாய் வருவித்துரைக்க.

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கின்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தானிடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே.

யாழோசையினும் இனிய மொழியமைந்த உமையம்மையின் கொழுநனென்க. இஃது அத் திருப்பதியின்கணெழுந்தருளிய இறைவியின் பெயர். நீரும் அரவும் பூவும் முதலாயின பொதிந்திருத்தலின் 'பேழைச்சடை' யெனப்பட்டது; பேழை, பெட்டி; பேணில், விரும்பில்; ஆவது விரும்பி வினவிலென்க. பூழை, நுழை; தலை, ஏழனுருபு, கூழைக்குரங் கென்பதை ஈண்டுக் குட்டிக் குரங்கெனக் கொள்க. இப் பாட்டின்கண் தாழையும் வாழையும் மயங்கி வருதலின், இது நெய்தலும் மருதமும் மயங்கிய திணைமயக்கமாகும். 'இடம் பேணில் அது மறைக்காடு' என்பது.

ஊனுய்யுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
தேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழியல்
நானாவித நினைவார்தமை நலியார்நமன் றமரே.

'உயிர் புகலா' யென்பது எழுவாய்த் தொடராகலின், இயல்பாய் வந்தது; 'உயிர் புகுமிடமாய்' என்று உரைத்துக் கொள்க. அகலிடம் உலகம்; விதியென்பதற்கும் ஆக்கச்சொற் பெய்து கூட்டுக. ஆதரித்து, விரும்பி; 'வண்டினம் இசைமிழற்று' மென்பது. நானாவிதம், பலபடி.

அருமணியை முத்தினையா னஞ்சு மாடு
மமரர்கடம் பெருமானை யருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பி னூறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போனீல மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

'ஊறலை'யெனச் செயப்படுபொருள் விகுதி விரித்துக்கொள்க. 'இருந்தே'னென்பதில் இருமை கருமைப்பொருட்டு. குரு-நிறம்; இழிதல்; இறங்குதல். வாய், ஏழனுருபு; கோல் வளையார் திரட்சியமைந்த வளைகளையுடைய மகளிரென்பது; கோல், திரட்சி; 'ஆய்கோ லவிர்தொடி' (௫௬௩] யென்னும் மதுரைக் காஞ்சியினும் இஃதிப்பொருட்டாய் வருதல் காண்க. கருமணிகள், கண்மணிகள்.

எறிக்குங்கதிர்வே யுதிர்முத்தமோடே
லமிலவங்கந் தக்கோலமிஞ்சி
செறிகரும்புனலுட் பெய்துகொண்டுமேண்டித்
திளைத்தெற்றுசிற்று றதன்கீழ்கரைமேல்
முறிக்குந்தழைமா முடப்புன்னைஞாழல்
குருக்கத்திகண்மேற் குயில்கூவலரு
வெறிக்குங்கலைமா வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியே னையும்வேண்டுதியே.

வேயுதிர், இடைப்பிறவரல். தக்கோலம், ஒருவகை மணப்பூடு; நச்சினார்க்கினியர் இதனை மரமென்றார் சீவக சிந்தாமணியில். (விமலையா. ௬௩) செறிக்கும் புனல், மேன்மேற் பெருகும் புனல். மண்டி, நிறைந்து; திளைத்து, நெருங்கி; எற்று மென்றது மோது மென்றற்கு. அரு, முற்றெச்சம்; இது காரண காரியப் பொருளது. குயில் கூவுதல் அருமையின் அது கேட்டு வெறிக்குங் கலைமாவென்க. வெறித்தல், அஞ்சி மருளுதல்; கலைமாவென்பது ஆண்மான்.

இளவழகனார்.

சீவராசிகளினிலக்கணமும் பிரிவும்

[Prof. P. சுந்தரம் பிள்ளையவர்கள் M. A.]

நம்மாலறியத்தகும் பதார்த்தங்க ளெல்லாம் கல் மண் முதலான உயிரில் பொருள்களும் புல் பூண்டு புள் விலங்கு முதலான உயிருள் பொருள்களும் என்ற இரு பெரும்பிரிவிற் குள் ளடங்குமென்பது யாவருமுணர்ந்த விஷயம். உயிரில் பொருள்களையும் உயிருள் பொருள்களையும் ஆதியோடந்தம் ஒத்துநோக்கி யவற்றிற்குள்ள வேற்றுமையை நிர்ணயித்து உயிர் அல்லது ஜீவனென்பதினிலக்கணம் இன்னதுதானென்று வரையறுத்து நிலைநிறுத்தல் நுண்ணிய சாஸ்திரப்பயிற்சி யுடையவர்க்கும் அரிதான காரியமாக இருக்கின்றது. ஆயினும் நமது நித்தியானுபவத்தில் நாம் கையாடுகின்ற பொருள்களுள் உயிருள்ளவை இவை, உயிரில்லாதவை இவை, எனப் பொதுவாக நாம் பகுத்தறிந்து கொள்கிறோம். அறியாத சிறுபாலர்கள் ஒழிய, யாரேனும் கல் மண் முதலியவற்றா லாக்கப்படு முருவங்களைப் பூச்சியென்று உயிருள் பதார்த்தமாகக் கொண்டு மயங்குவதுண்டா? இவ்விதம் நாம் நமது தினசரியில் காணும் ஜீவராசிகளையும் ஜடராசிகளையும் பிரித்துணரும் குறிப்புகளைச் சற்றுற்றுணர்ந்து பார்த்து அவற்றின் வேறுபாடுகளை விளக்கும் இலக்கணங்களைச் சிறிது நிதானிப்போமாக.

2. இங்ஙனம் பார்க்கையில் ஜீவராசிகளுக்குரிய பல இலக்கணங்களுள் மூன்றிலக்கணம் யார்க்கு மெளிதில் புலப்படத்தக்கனவாயிருக்கின்றன. அவையாவன:—முதலாவது "அவயவீபாவமான சரீரம்", அல்லது "உறுப்போடமைந்த வுடம்பு".

இரண்டாவது விருத்தி க்ஷயம், அதாவது வளர்தல் கெடுதல்.

மூன்றாவது பிரத்தியுத்பாதாநம், அதாவது தன்னைப் போன்ற பிரதிநிதி சமைத்தல், அல்லது பிற்கிளையாக்கம்.

3. பிரஜை யற்றவனுக்கு எப்படி ராஜா என்ற நாமம் வரமாட்டாதோ, பிள்ளை யற்றவனுக்கு எப்படித் தந்தை யென்ற பெயர் கிடையாதோ, அப்படியே உயிரில்லாவிடில் உடம்பென்ற வேற்றுமைத் தோற்றம் பிறவாது. உடம்பென்பது உறுப்புகளா லாக்கப்பட்ட யாக்கை. ஒரே பொருள் பல பாகங்களாகப் பிரிக்கப்படும்படி இருக்கவும், அப்படி பிரிக்கப்படும் பாகங்களுக்குத் தனித்தனி வெவ்வேறு தொழில்களும் அத்தொழில்களுக் கேற்ற கட்டுப்பாடு குண முதலிய வையு மிருக்கவும் செய்தால், அப்பாகங்களி லொவ்வொன்றும் உறுப்பு அல்லது அவயவமெனப் பெயர்பெறும். அவ்வுறுப்புகளியற்றுந் தொழில்கள் பலவற்றையும் ஒருமைப்படுத்தி யனுபவிக்கும் சமூகத்திற்கே உடம்பு, யாக்கை, அல்லது சரீரம் என்ற பெயர் உரியதாகும். இதனைச் சோதித்தறிய விரும்புவோர் மரவர்க்கத்தி லேதேனுமொன்றை யெடுத்துப் பார்ப்பாராகில் அதற்கு வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய் முதலிய பலவுறுப்புகள் அமைந்து கிடைப்பதையும், அவற்றி லொவ்வொன்றும் வெவ்வேருன வடிவு, பண்பு, கட்டு, தொழில் முதலியவற்றைப்பெற்று நிற்பதையும், இவ்வவயவங்களனைத்தையுந் தன்னுளடக்கி யிவற்றின் செய்தொழில் பயனை யநுபவிக்கு மரமாகிய சமூகம், அவயவீபாவமடைந்து சரீரமெனும் பெயர்க்குரித்தாய் விளங்குவதையும் காண்பார்கள். இப்படியே ஆடு, மாடு நாய், நரி முதலிய மிருகங்களைக்குறித்து யோசிக்கையிலும், அவற்றின் கண், செவி, கை, கால் முதலிய வெளியுறுப்புக்களும், அன்னாசயம் ரக்தாசயம் பித்தாசய முதலிய உள்ளுறுப்புக்களும், அவற்றின் வெவ்வேறும் உருவம், குணம், விதானம், வியாபார முதலியனவும், அவ்வவயவங்களின் சமஷ்டியாகிய உடம்பின் நிலைமையும் காணலாகும். இரும்பு, கல் முதலியவற்றை யெடுத்துச் சோதித்துப் பார்க்கிலோ, அவை அவயவ பேதமற்றவைகளா யெங்கு மொருபடித்தாங் கட்டுப்பாடும் சமகுணமும் ஒரே தொழிலு முடைத்தாய் முற்கூறிய இலக்கணத்திற்கு மாறுபட்டு நின்று தாமுயிரில்பொருளென விளக்கி நிற்பதும் புலப்படும். கடிகார முதலிய யந்திரங்களும்

பல அங்கங்களா லாக்கப்பெற்றும் அவ்வங்கங்கள் வெவ்வேறும் வடிவம், குணம், கட்டு, தொழிலிவைகளை யுடையனவாயு மிருப்பதால், அவ்வங்கங்களை யுறுப்பென்றும், அவற்றின் சமஷ்டியாகிய யந்திரங்களை யுடம்பென்றுங் கொண்டு, அவை களையு முயிருள்ள பதார்த்தங்களாக மதிக்கக்கூடாதோ எனின், அவ்வங்கங்களின் சேர்க்கை இயற்கையன்றிச் செயற்கையாதல் பற்றி யுறுப்பெனக் கூறுதல் வழக்கமன்று. அன்றியும் அவை களையும் ஒருகா லுறுப்பெனவே மதிப்போமாயினும், உயிருள் பொருள்களுக்கு வகுத்த மூன்றிலக்கணங்களில் "உறுப்போ டமைந்த உடம்பு" ஒன்று தவிர மற்றிரண்டு இலக்கணங்களும் பொருந்துமோவெனத் துணிந்த பின்னரே யந்திரங்களும் ஜீவ ராசிகளி லடங்குமெனக் கருதல் கூடும்.

4. நாம்கூறிய உயிர்களி னிரண்டாமிலக்கணம் விர்த்தி க்ஷயம் அல்லது வளர்தல் கெடுதலெனுங் குணமாம். இக்குணம் உயி ரில்லாத பூத பௌதீகங்களுக்கும் அவற்றால் நாம் உண்டு பண் ணும் எவ்வகைக் கருவிகளுக்கும் பொருந்துவதன்று. அறியா தார் பாறைக் கற்கள் வளர்ந்து வருகின்றன வென்று மயங்கு வர். அத் தோற்றத்திற்குக் காரணம், அக் கற்களைச் சுற்றி யிருக்கு மண் முதலியன மழையாதியால் சிறிது சிறிது நீங்கி யப்பாறைகள் காலக்கிரமத்தில் அதிகரித்து வெளிப்படுதலே யாம். இஃதன்றியும் அக்கினி பர்வதாதி ஏதுக்களாலும் அத் தோற்றம் உண்டாகுமென்பது பௌமிய சாஸ்திரப் பிரசித்தம். உண்மையில் வளர்தல் கெடுதலென்பது ஆகாரஸ்வீகாரத்தின் பயனாகவே யிருக்கின்றது. நமது கொல்லையிற் பயிரிடும் கத் தரி, பாகல், கீரை முதலிய மரவர்க்கங்களெல்லாம் நீர் பாய்ச்சப் படாவிடில் வாடிச் சோர்வதையும் நீர் பாய்ந்த பொழுது தழைத்து வளர்வதையும் அறியார் யார்? இவைகள் யாவும் வேரினால் மண்ணினுள்ள சில பௌதிகங்களையும், இலை முதலியவற்றால் காற்றினுள்ள சில பௌதிகங்களையும், எல்லா அங்கங்களாலும் விசேஷமாய் வேரினாலும் நீரையுமுட்கொண்டு அவ்விதம் தங்களுக்குக் கிடைத்த பொருள்களைத் தத்தமக்கு

வேண்டிய பகுதிகளாக மாற்றித் தம் முறுப்பையும் உடம்பையும் வளர்த்துக் கொள்ளுகின்றன வென்பது கவனித்தால் யாவர்க்கும் புலப்படக் கூடியதே. இப்படி சீவராசிகள் வெவ்வேறு பூதபௌதிகங்களை யுட்கொண்டு அவற்றைத் தங்கள் சரீரத்தோடு அபின்னமாகக் கலப்பிக்குந் தொழிற்கே ஆகார ஸ்வீகாரம் அல்லது 'உண்ணல்' எனும் பெயர் அமையும். "உண்ணலென்பது தன்மயப்படுத்தல்" *. ஒரு பைக்குள் நாணய மிடுதல் போலும் ஒரு பாண்டத்தில் யாதாயினு மொரு பண்டம் பெய்தல்போலு மன்று, இவ் வுண்ணுதல் எனுந் தொழில் நெய்யில் தோய்த்த பஞ்சு அந் நெய்யை உண்டதாகச் சொல்வது உபசாரமே யல்லாது உண்மையன்று. இவை யுட்கொண்ட பொருள்கள் அவற்றின் குணங்களோடு மீண்டு வரக் கூடியவையாயும் அப்படி மீளாவிடினும் குணவேறுபாடு அடையாமல் இடப்பெயர்ச்சி மாத்திர மடைந்தவையாயும் நிற்பதினால் நாம் சிவிகையாதி வாகநத்தில் புகுந்திருக்குங்கால் நம்மை அவ் வாகநங்கள் உண்டவாறாகாதது போலவே அப் பை பாண்டம் பஞ்சு முதலியனவும் யாதொன்றையும் உண்டதாக ஏற்படாது. நீரில் கரைக்கப்பட்ட உப்பும் அப்படியே நீரினால் உண்ணப்பட்டதன்று. அங்ஙனம் அவ்வுப்பை நீர் உண்டதாக மதிக்கப்படல் வேண்டுமேல் அவ்வுப்பின் சகல குணங்களு நீங்கி நீரில் அளவையும் பெருக்கித் தான் ஒருகாலு மீண்டுவராத நிலைமையை யடைதல் வேண்டும். "உப்போ டப்பை மருவ விட்டும் ஐக்கிய முன்னி வருந்தா நிற்பேன்"† எனும் ஆன்றோர் மொழி ஏகதேச உவமையாகக் கொள்ளல் வேண்டுமே யன்றிப் பூரண ஐக்கியத்திற்குத் திருஷ்டாந்தமாகாது. காய்ச்சிய பாலின்மேற் படரும் ஆடையானது சிறிது சிறிதாக அப்பாலினுள்ள நெய் மயத்தை ஸ்வீகரித்துப் பெருகுவது உண்ணுதலாலுண்டாகும் வளர்தல்போ லன்றோ வெனின், அப்படியன்று. முறத்திலிட்டுப் புடைக்குங்கால் உமி வேறு அரிசி வேறாகுதல்

---

* நூற்றொகைவிளக்கம், சூத்திரம், 24

† தாயுமான சுவாமி பாடல்.

போலக் கலப்புண்டிருந்த இரண்டு பௌதிகங்கள் தனித்தனி பிரிதலே அன்றி ஒன்றை மற்றொன்று உண்டதாக இல்லை. இப்படியே இரசாயந சாஸ்திரப் பிரசித்தமான கந்தகஜநிதாதி சில பௌதிகங்கள், தங்களுடைய ஆகருடண சக்தியால் நீரில் கலப்புண்டிருக்கும் தமக்கேற்ற வேறு பௌதிகங்களை இழுத்து அவற்றோடு முயங்கி வளர்வது போன்ற சில அற்புதத் தோற்றங்களைக் காட்டுமேனும், அவைகளுக்கு உறுப்போடமைந்த யாக்கையும் ஜீவராசிகளின் மூன்றாமிலக்கணமான பிரத்தியுத்பாதந சக்தியு மில்லாமையால் அவற்றை ஜீவராசிகளாக யாரும் மயங்கார்கள்.

5. பிரத்தியுத்பாதந சக்தி அல்லது பிற்கிளையாக்கம் என்பது சீவராசிகள் தங்கள் தங்களுடம்பிலிருந்து தம்மைப் போல் உறுப்புகளமைந்த தம் சாதி உயிர்களை யுண்டுபண்ணும் வல்லமைக்குப் பெயராம். இது மிருகவர்க்கத்துக் கன்றி மரவர்க்கங்களுக்கும் பொதுவான இலக்கணம். காயுண்டாததெல்லா மிதன் பொருட்டே, ஒரு கல் ஆயிரந் துண்டுபட உடைந்து தன்னைப் போன்ற உருவும் குணமுமுடைய பலவாய்ப்பவிப்பதற்கும் பிற்கிளையாக்கத்திற்கும் உள்ள பெரும் வேற்றுமை எடுத்துக்காட்டாமலே புலப்படக் கூடியதன்றோ? ஒரு கல்லானது தனது பூர்வ ஸ்திதியை யிழந்தன்றிப் பல கற்களாகாது. மேலும் பலவாய்ச் சிதறிய கற்கள் ஒவ்வொன்றும் முன்னொன்றாயிருந்த கல்லைப்போலப் பருத்துப் பின்னும் இப்படி பலவாதற்குக் கூடியதுமல்ல. "நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்துக் கொண்ட கருவழிக்குங் கொள்கை போல்"* சில வுயிர்கள் பிற்கிளையாக்கத்தால் தம்முடலழிவது இயல்பே; ஆயினும், அப் பிற்கிளைகள் காலக்கிரமத்தில் வளர்ந்து ஒன்று பலவாகத் தாமும் பெருகுவதனால் இவற்றின் பிரத்தியுத்பாதநத்திற்கும் கல்லுடைதலுக்கும் வேறுபாடு பெரிதாம். இம் மூன்றிலக்கணங்களி லொவ்வொன்று சிற்சில இடங்களில் புறநடையாகப் பிற பொருள்களுக்குக் காணப்படுமாயி

---

* ஔவையார்.

னும் மூன்றிலக்கணமு மொன்ருகப் பொருந்துவது சீவராசிகளிடத்து மாத்திரமேயாம்.

6. கூறிய மூன்றிலக்கணங்களும் சீவராசிகளைச் சட பதார்த்தங்களிலிருந்து பிரித்தறிந்து கொள்வதற்குப் போதுமாயினும், அச்சீவராசிகளின் விசித்திரங்களையும் குணவைபவங்களையும் நன்கறிதல் வேண்டுமாஞல் அவற்றை வெவ்வேறு பிரிவுகளாய்ப் பகுத்து ஒவ்வொரு பிரிவுக்குமுள்ள விசேஷ லக்ஷணங்களைச் சோதித்தலாவசியகம். இதோ நிற்கிற மரமும் இதில் கட்டி யிருக்கிற பசுங் கன்றும் உயிருடையவை யெனுந் தன்மையில் ஒப்பேயாயினும் மற்றெல்லா விஷயங்களிலும் எவ்வளவு வேறுபாடுடையன! உயிரிலக்கண மாராய்வோர் முதலில் ஜீவராசிகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்ருர்கள்.

முதலாவது ஸ்தாவரமல்லது மரவர்க்கம்.

இரண்டாவது சரம் அல்லது மிருகவர்க்கம்.

இப்பிரிவு சாமாநிய நித்திய அநுபவத்திற்கும் ஒத்ததாக நிற்கும். ஆயினும் அவற்றிற்குள்ள நுண்மையான பேதாபேத நிர்ணயம் அருமையான சாஸ்திர விசாரணைகளிலொன்ருக இருக்கின்றது. நீர்வாழ் செந்துக்களாகிய கண்ணுக்குப் புலப்படாத பல பொடிப் பூச்சிகளுக்கும் அத்தன்மையான சில பாசியினங்களுக்கும் வேற்றுமை கண்டு பிடித்தல் சிற்சில சமயங்களில் கருவிகளின் றுணையாலுங்கூட அரிதெனச் சொல்வார். இவ்வித நுண்ணிய ஆராய்ச்சிக்குத் தக்க தருணம் பின்வருமாயினும், சீவராசிகளின் பெரும் பிரிவுகளான மரவர்க்கத்திற்கும், மிருகவர்க்கத்திற்கும் உள்ள முக்கிய வேற்றுமையை ஒருவாறு முதலில் நிச்சயித்துக்கொள்வோமாக.

7. பொதுவாக இவ்விரு பிரிவுகளையும் ஒத்துப் பார்க்கில், மிருக வர்க்கத்திற்கு அவயவீபாவம், விர்த்திக்ஷயம், பிரத்தியுத்பாதநம் ஆகிய மூவகைப் பொது இலக்கணங்களுடன் கூடுதலாக இரண்டு சிறப்பிலக்கணங்களு முண்டெனக் காணலாம்.

அவையாவன:—(1) பிறபொருள்கள் தம் முடம்பின்மேல் பல வாறு தாக்குதலை யுணர்தலும், (2) அப்படித் தாக்குதலுக் கேற்றவாறு இடம்பெயர்ந்து தாமே சலித்தலும் ஆகிய இவ் விரண்டே. மாலைக்காலத்து நாம் தெருவில் உலாவுங்கால், வழியில் கிடப்பது பழுதையோ பாம்போ வெனும் ஐயம் தெளிவதற்கு, யாதேனும் ஒரு கட்டையோ ஒரு பிடி மணலோ எடுத்து அதன்மேல் எறிந்து, அப்படி யெறிந்த பொருளின் தாக்குதலால் சிறிதேனும் சலநம் பிறவாவிடில் பழுதைதா னென்றும், பிறக்கில், பழுதையன்று பாம்பே என்றும் நாம் துணிந்து கொள்வது மேற்கூறிய இலக்கணத்தின் உண்மையை விளக்கிக் காட்டுகின்றதல்லவா? பிறபொருள்கள் தம்மேற் றேடின் அத்தாக்குதலை யுணருகிறதற்கு மிருகவர்க்கங்களிடத் தில் அமைந்து கிடக்கும் உறுப்பிற்குப் பொதுவாகப் புலன் என் றும் அத் தாக்குதலுக் கேற்கச் சலிக்கும்படி அவர்களிடத்தில் அமைத்திருக்கும் உறுப்பிற்குப் பொதுவாகப் புலால் என்றும் பெயர் கூறலாம். மனிதர் சரீரத்திலும் யானை, குதிரை, ஆடு, மாடு முதலிய வுயர்ந்த விலங்கினங்களின் உடம்பிலும் உள்ள ஞானேந்திரிய கருமேந்திரிய உறுப்புக்கள் அனைத்தும் இப் புலன் புலால் என்ற பொது உறுப்புக்களின் விகற்பங்களே யாம். கண், காது, மூக்கு நாக்கு ஆகிய உயர்ந்த புலன்களில் சிற்சில இல்லாவிடினும் பஞ்சேந்திரியங்களுள் ஆதியிந்திரியமாக இருக்கின்ற 'துவக்கு' அல்லது 'மெய்' இல்லாத மிருகங்கள் இல்லை. அப்படியே கைகால் முதலிய கருமேந்திரிய விகற்பங் கள் இல்லையாயினும், சிறிதேனும் அசைதற்குக் காரணமா யிருக்கும் ஒருவரிப்புலாலேனும் இல்லாத புழுவோ பூச்சியோ இதுகாறும் கண்டதில்லை. ஆனால் மரவர்க்கத்துள் அகப்பட்ட "தொட்டால் வாடி" முதலிய சிற்சில புற்பூண்டுகள் அவற்றின் மேல் யாதேனும் ஒரு பொருள் விழுந்தால் கூச்ச முற்றவை போலத் தங்கள் இலைகளைச் சுருக்கிக் கொள்வதினால், மிருக வர்க்கத்திற்கே யுரித்தெனக் கூறிய 'வுணர்தல் சலித்தல் என்னும் இரண்டு இலக்கணமும் அதிவியாப்தி தோஷத்தால் பழுதா காதோ எனின்; அது சரியே, இத்துணை உதாரணங்களைக்

குறித்தே தொல்காப்பியரும், "புல்லு மரனு மோரறிவினவே பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" எனச் சூத்திரம் கூறினூர் போலும்; ஆயினும் பெரும்பான்மை சிறுபான்மை நோக்கியே பெரும் பிரிவுகளாக ஏற்படும் ஸ்தாவர சரவுயிர்பேத இலக்ஷணம் நிர்ணயிக்கக் கூடுமாதலின், அங்கங்கு மிகவும் அருமையாகத் தோற்றும் இத்தகைய வழுக்களைப் புறநடையாகக் கொள்ளுதல் நூலொழுங்கும் ஆன்றோர் வழக்கமுமாக இருக்கின்றது. இதுபற்றியே மிருகவர்க்கத்திற்கும் மரவர்க்கத்திற்குமுள்ள வேற்றுமை வரையறுத்து வகுத்தல் அரிதென முன்னரே கூறப்பட்டது. ஆயினும் 'தொட்டால் வாடி' முதலிய நங்கண்ணுக்ககப்படும் புற்பூண்டுகளின் சலநம், இலையாகிய ஒரே உறுப்பிற்கன்றி மற்றையங்கங்களுக் கில்லாமலும் அவை முற்றிலும் இடம் பெயர்ந்து இயக்கமுறும் வலிமை பெருமலும் இருப்பதினல் நாம் கூறி நிறுத்திய உணர்தல் சலித்தல் என்னும் இரண்டு இலக்கணங்களுமே மிருகவர்க்கத்தையும் மரவர்க்கத்தையும் பிரித்து அவற்றிற்குள்ள வேற்றுமையை விளக்கப் போதுமாக அமைகின்றன.

ஜீவராசிகளின் பெரும் பிரிவுகளாகிய ஸ்தாவரம் சரமென்னும் இவற்றின் உட்பிரிவுகளையும் விசித்திரங்களையும் சோபாநக்கிரமமாகச் சந்தர்ப்பம் வாய்த்தவழி யினிமேல் சோதிப்போம்.

—விவேக சிந்தாமணி.

சீவக சிந்தாமணி

[நூல்நலங் காண்போன்]

இந்நூலினைப் பற்றி ஆராய்வான் புகுந்த யாம் இந்நூலாசிரியராகிய திருத்தக்க தேவர் காலத்து நாகரிகத்தைப் பற்றியே முதற்கண் நோக்குவாம்.

ஆசிரியர் காலம்:—சீவகன் சரித்திரங் கூறப்பட்டுள்ள இக்காலம் பௌத்தமதம் பலராலும் பாற்றப்பட்டொழிந்து இந்து

மதம் மூர்ந்திய நிலையை முற்றும் பெறாது நடுவே இருதிறத்தார் கொள்கையுள்ளுஞ் சிலவற்றைத் தம்வெனக் கொண்டு தமக்கெனப் பிறிதொரு மதமொன்றைப் புனைந்துகொண்டு அவ்விரு திறத்தாரினும் வேறாயினராய்ச் சைனரெனப் பெயர் பூண்ட மதத்தினர் மிக்கிருந்த காலமேயா மென்றற்குப் பல நியாயங்களுள்ளன. இக்காப்பியமே சைன நூலாமென்பது எல்லாவற்றினுஞ் சிறந்த நியாயமாம். இதுவே கடைச் சங்கத்தார் காலமென்பதும் விளங்கும். யாங்ஙனமெனின், ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'இத் தொடர்நிலைச்செய்யுள் * தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமு மாதலானும்' என்றெழுதியதனாலும் அவைதாமே கடைச்சங்கத்தார்க்கு இலக்கணமென்பது இறையனாரகப்பொருளுக்கு நக்கீரரெழுதிய வுரையாலும் தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தாலும் பிறவாற்றாலும் அறியப்படுதலானு மென்க.

இந்தியாவின் நாடுகள்:—நமது இந்து தேயமானது அக்காலத்திற் பற்பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது போலும். அவற்றுளெல்லாம் ஏமாங்கத மென்னு நாடானது 'இசையாற் றிசைபோயது' எனக் கூறப்பட்டுள்ளமையின் மற்றையவற்றினுஞ் சிறப்புற்றிருந்த தென்பதற் கையமில்லை. இத்துணைச் சிறப்பினதாய இந்நாட்டின் தலைநகர் இராசமாபுரமாம். அது கடற்கரையி லிருந்ததென நகர வருணனையில் விளங்கக் கூறப்பட்டுளது. இதுதான் அக்காலத்திற் செல்வம், கல்வி, குண முதலியவற்றுளெல்லாந் தலைமை பெற்றிருந்தது. இந்நாட்டைக் குருகுலத்தரசர்கள் சிலராண்டு வந்தனரென்பது தெரிகிறது. அவரிற் றலையாயினார் சச்சந்தனென்பானும் அவன் மகன் சீவகனென்பானுமே. இவருள்ளும் சீவகன் கொடையானும் கல்வியானும் முறை செய்தலானும் மிக்கு விளங்கினானென்பது இந்நூலின் பெயராலேயேகொள்ளக்கிடக்கின்றது. இதுவேயன்றித் தக்க நாடு, பல்லவ தேயம், மத்திம தேயம், விதேகநாடு, தாதகி நாடு முதலிய தேயங்களும் கேமமாபுரம், ஏமமாபுரம், பூமி மாதிலகம், வாரணவாசி முத

* தேவரென்றது இந்நூலாசிரியராகிய திருத்தக்க தேவரை.

லிய நகரங்களும் இக்காலத்திற் பிரசித்தி பெற்றிருந்தன வென்பதுந் தோற்றுகிறது.

சாதி :—நால்வகைச் சாதிபேதங்களும் இக்காலத்தேயும் இருந்துள்ளன. அன்றியும் ஒவ்வொருவரையும் இவர் நால்வகைச் சாதியில் இச்சாதியின ரென வரையறுத்துச் சுட்டுதல் இயலாதாகலின் இவ்வருணக் கலப்பாற் பிறந்த அனுலோமப் பிரதிலோமர்களும் * சங்கர சாதியினரும் அக்காலத்தேயும் இருந்துளர். இஃது இராசமாபுரத்துக் கடைத்தெரு வருணனையிற்,

" பூசுசாந் தொருவர் பூசிற்றெழுவர்தம் மகலம்பூசி
மாசன மிடம்பெறாது வண்கடை மலிந்ததன்றே "

எனத் தேவர் கூறுமாற்றானும் "நான்கு சாதியும் அனுலோமப் பிரதிலோமருஞ் சங்கர சாதியும் பற்றி "எழுவர்" என்றார்" என உரையாசிரியர் கூறுமாற்றானும் அறியப்படும்.

பாஷை :—இக்காலத்துச் சிங்கள முதலாய பதினெண் பாஷையும் பயில வழங்கின. அதனை "முட்டிலா மூவறுபாடை மாக்கள்" எனத் தேவர் கூறுவதனாலறிக. அன்றியும் மிலேச்சராதலின் ஐயறிவிற்குரிய "மாக்கள்" என்னும் பெயராற் கூறினார்; என ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதினமையின் இலக்கணத் திருத்தமில்லாத சொற்களைச் சொல்லுவோராகிய மிலேச்சர் எனப் பெயர் பெற்றார் சிலர் இருந்தன ரென்பதூஉம் விளங்கும்.

உணவு :—அரிசி, நெய், தயிர் இவைகள் இவரது உணவிற்கு உபயோகிக்கப்பட்டன. களி, துவை முதலிய உணவின் பேதங்களுமிருந்தன. பெரும்பாலார் வெற்றிலை உபயோகித்தனர்.

---

* சங்கரம் - கலப்பு.

ஆலய வணக்க முதலியன :—இக்காலத்திற் சினாலயங்கள் பற்பல விருந்திருத்தல் வேண்டும். "திங்கள் முக்குடை யான் றிரு மாநகர், எங்குமெங்குமிடந்தொறுமுண்மையால்" எனக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் கவி தமது மதாபிமானத்தாற் புனைந்திருத்தலும் கூடும். திருவிழாக்களும் நித்திய நைமித்திய கருமங்களாகிய யாக முதலியனவும் தேவருடைய பலியும் நடந்து வந்தன. அரசர் முதலாகப் பல்லாயிரவர் ஒருங்குகூடி இப்பலிகளைச் சேவித்தனர். இக்காலங்களிற் சங்கம், முழவு, முரசு முதலிய இசைக் கருவிகள் முழக்கப்பட்டன. இவ்வாலயங்களில் இருபாலாருந் தொழுது வந்தனரென்பது இடை நகரிடம் 'மாலையும் பூணு மயங்கப்பட்டுச் சிலைபோலு நுதலினாரோடே யாடவரும் கலக்கப்பட்டுத் தேவிருப்பிடமிது வென்றையந்தரும்' என்றதனாற் போதருமென்க.

"குன்றிற்
கார்த்திகை விளக்கிட்டனன் கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் அகலம்"

எனத் தேவர் கூறுதலிற் கார்த்திகைத் திருநாளிற் குன்றின்மேல் விளக்கிட்டு வந்தனரென்பது விளக்கமாம். இதனாற் றிருவண்ணாமலைத் தீபத்தையே குறிப்பிட்டன ரென்பதும் ஊகிக்கப்படுகிறது. அஃதக் காலத்தேயும் அத்துணைச் சிறப்பினதாயிருந் திருத்தல்வேண்டும்.

இச்சைனர்கள் அருகனையுஞ் சித்தனையுஞ் சாதுக்களையுந் தன்மத்தையும் வணங்கி வந்தார்கள். இஃது இவருக்கு முக்கிய நமஸ்காரமாகிய பஞ்ச நமஸ்காரம் என்பது அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்சபரமேஷ்டிகளை வணங்குதற் குரியனவாகிய ஐந்து மந்திரங்களாதலின் நன்கு விளங்கும்.

மதக் கோள்கைகள் :—இவர் மதவிஷயமாகிய சில கொள்கைகள் மற்றைய மதக்கொள்கைகளே போன்று பிறமதத்தாராற் கொள்ளப்படா தொழிவனவேயாம். 'ஒரு மனிதனுதல்

பிராணியாதல் இறக்குந் தருணத்திற் பஞ்ச நமஸ்கார மந்திரத்தைச் செவியில் ஓதினல் உடனே அவ்வுபதேசத்தால் அவ்வுயிர் தன்னுடம்பை யொழித்துத் தேவனாகி விண்ணிற் செல்லுமென நம்பியிருந்தனர். இன்னும் இம்மந்திரம் வழித்துணையாக வெனக் கூறப்படுவது முண்டு.

"ஆருயிர்க் கிழத்தி தன்னை
யின்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணைகூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன்"

எனத் தேவர் கூறியதற்கு "அவனாணை 'ஓம் நமோ அரஹந்தானம்' என்னுமொழி" என நச்சினார்க்கினியர் உரையெழுதினமையான் இஃதுணரப்படும். உயிர் நீங்கும்பொழுது தியானம் வந்துதவினல் வீடுபேறும் என்பது இவர் கொள்கை. வானவர் கால் நிலத்திற் றோயாவென்றும் அவர் நோக்காலே நுகர்வரென்றும், மனிதரூபமாய் உலகில் வந்து தம்மையொழிய வேறு கதியில்லாத தமதன்பருக் கருள் புரிவரென்றும், அவர் வினையுலந்தாற் றமது நிலையினின்றும் விழுந்து விடுவரென்றும் அவர்க்குயிர் போகப் பதினைந்து நாள்களுளவெனக் கண்ணுமிமைக்கு மென்றும், செல்வமுண்டாதற்குப் பலி நடத்தல் வேண்டுமென்றும் நம்பி யிருந்தனர். காவன் மகளிர் அரசற்கு வெற்றி நிலை பெறும்படி யேத்துவதற்காகவே சில ஸ்ரீ கோயில்கள் ஏற்படுத்தப்பட்டன. கனாக்கண்டால் அது கடிதிற் பயக்குமெனவும் நம்பினர். கனவுக்கு முற்பட்டுத் தோன்றாத பொருளே யில்லை என இவர் கொள்கை. இதனைக்,

"கல்லாதான் கண்ட கழிநுட்பங் கற்றார்முற்
சொல்லுங்காற் சோர்வு படுதலால்—நல்லாய்
வினாமுந் துறாத வுரையில்லை யில்லை
கனாமுந் துறாத வினை".

என்னும் பழமொழியா லுணர்க. அன்றியும் சீவகன் சரித முழுவதுங் கனவின் பயனாகவே கூறப்பட்டிருத்தலுங் காண்க. காந்தருவத்தையா ரிலம்பகக் கதையால் இவர் சோதிடத்திலும்

மந்திரவித்தையிலும் நம்பிக்கை வைத்திருந்தார்க ளென்பது மறியப்படும். தம்பால் வந்து மீளும் பெரியோர்களுடன் ஏழடி யளவு சென்று வருவோர் ஸப்த பயத்தினின்று நீங்கி ஸப்த பரம ஸ்தானத்தைப் பெறுவரென்பது இவரது நூற்கொள்கை. உயிர்கள் எண்ணிறந்த பிறவிகளிற் றோன்றுவன என்பதும் ஒரு பிறவிக்கு முன்னர் இத்துணைப் பிறவி எடுத்தோமென்பது கணக்கிடற் கரியதென்பதும், இப்பிறவிகடோறும் வெவ்வேறு உறவினரை யுடையோமாதலின் ஓர் பிறவியிலுள்ள உறவினருக் காக இரங்கல் அறிவின்மையா மென்பதும், சாதலும் பிறத்த லும் ஆதலும் அழித்தலும் எல்லாம் தம் வினைகளின் பயத்தான் விளைவன வென்பதும், ஆண்டுச் சாதற்கும், அழித்தற்கும் நோதலும் பிறத்தற்கு மாதற்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவிலாரது செயல்களாம் என்பதும், அவ்வினையுறுதல் பொருட்கு இயல்பா மென்பதும் இவரது கொள்கைகள். இவற் றை யெல்லாம்,

" சாதலும் பிறத்த லூனும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவுமெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்"

" தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா
எல்லைய வவற்று ளெல்லா மேதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா"

எனச் சச்சந்தன் கூற்றாகத் தேவர் கூறுவதனா லுணர்க. இத னாற் றுன்பமாவது உள்ளத்தோர் கோட்பாடே யன்றிப் பிறி தில்லை யென்பதூஉம் அது மாறுபடக் கொள்ள நீங்கு மென் பதூஉம் இதனை யறிவதே யறிவென்பதூஉம் கையில் வெண்ணெ யிருக்க நெய்க்கழுவா ரிலராதலின் தம்முள்ளத்துப் பிறிது பட வுள்ளல் வழியானே யிடர்ப்பாட்டினை நீக்க முயலாது வருந்து வார் அறிவில ரென்பதூஉம், இங்ஙனம், இன்ப துன்பங்கள் மனக்கோளே யன்றி வேறல்லவாதலின் அவைகளைப் பொருட்

படுத்தாது ஒருவுதலே நன்றென்பதூஉம் இவர்கள் நன்குணர்ந்தார்களென்பது பெற்றும்.

மணம் :—பெருந்திணைப்பாற் பட்ட இராக்கத மணமும் இக்காலத்தில் மணமெனவே கொள்ளப்பட்டிருந்த தென்பது தெரிகிறது.

கூத்து :—இக்காலத்திலே நாடகசாலைகள் பற்பலவாக விருந்தனவாகல் வேண்டும். அவற்றிலே மகளிர் பெரும்பாலும் நடித்து வந்தனர். இது கொலைத்தலைய வேற்கணார் கூத்து என்றதனும் "காமர் வல்லி மாதரார் கூத்தரு த பள்ளியும்" என்றதனு முணரப்படும்.

இராகம் :—இராக ஞானம் பெரிதும் பயன்படுத்தப்பட்டதென்பது புலப்படுகின்றது. இது விசயை மயிற்பொறியைப் பையப்பைய மேன்மேற் றுரந்து விசையுடனோடும்படி மூறுக்கவுமுணர்ந்தாளென்புழிப் பிறிதோருவமமெடாது இசைப்பாட்டு ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்கு மெல்லச் செல்லுதலை உவமமெடுத்து உரைத்தத லறியப்படும். அன்றியும் காந்தருவதத்தைப் பாடுதலினும் யாழ்வாசித்தலினும் மிக்கு விளங்கினதாகக் கூறப்பட்டமையும் அவளை இசையில் வென்ற சீவகனை 'வீணைக்கிழவன்' எனப் பதிகத்தும் 'பண்ணினுக்கரசன்' எனச் சுரமஞ்சரியா ரிலம்பகத்தும் 'யாழாசிரியன்' எனக் கத்திய சிந்தாமணியிலும் புகழ்ந்திருத்தலும் காண்க. இன்னும் இதனை ஆமந்திரிகையி னிலக்கணத்தானும், "ஒழிந்த கருவிகளோடு கூடு மழலையுஞ் சுவையையுமுடைய நரம்பையுடைய யாழ்" என்றதனு மறிக. இக்காலத்துச் சனங்களெல்லாம் ஆடல் பாடல்களின் மிக மகிழ்ந்தனர்போலும்.

ஆட்டுக்கடாச் சண்டை கோழிச் சண்டை முதலியன :-இக்காலத்திலே நமது தேயத்திலேயும் சிற்றறிவினராகிய சில மனிதர்கள் ஆட்டுக்கிடாய்களையும் கோழிகளையும் குறும்பூழ்ப் பறவை முதலிய சேவல்களையும் போர்க்கொளுத்திக் களிப்படைந்தார்களென்ப தறிகிறோம். இது,

"கோட்டிளந் தகர்களுங் கொய்ம்மலர் தோன்றிபோற்
சூட்டுடைய சேவலுந் தோணிக்கோழி யாதியா
வேட்டவற்றி னூறுளார் வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்
காட்டியார்க்குங் கௌவையுங் கடியுங்கௌவை கௌவையே."

என்றதனாலும்,

"பூத்தலை வாரணப் போர்த்தொழி லிளையவர்
* நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயிறர."

என்றதனாலும் உணரப்படும். ஆயினும் இஃது அக்காலத்தே யும் நன்மக்களால் வெறுக்கப்பட்ட தென்பதும் இன்னணம் அவற்றினது புன்மைக் கருதாராய்ப் பின்னும் போரை விரும்பி ஆரவாரஞ் செய்வோர் செல்வச் செருக்கினையுடைய மாந்தரே யாமென்பதும் தோன்ற அவரை "வெருளி மாந்தர்" எனத் தேவரிழித்துரைத்தமையா னறிக.

உழவு :—ஓடு நீரானது பரந்து வழங்கும்படி நீர் வரத் தறிந்து கற்படுத்திய வாய்க்காலின் தலைப்புக்கள் ஆங்காங்கிருந் தன. தண்ணீரைக் கோட்டகத்தே நிறைப்பதற்காக வாய்த் தலையிடந்தொறும் நாட்டிலுள்ளார் படலிடுவது வழக்கம். உழ வர்கள் எருமைக்கடாக்களையும் எருதுகளையுங்கொண்டு நிலத் தை யுழுதார்கள். அங்ஙனம் உழுவார் நிலமகளையும் இந்திரனை யுந் தொழுது முளையை விளைகவென்று வித்துவார் இம்மள்ளர் கள் மதுவுண்பது வழக்கம். விளைவு முற்றின பின்பு நெல்லை யரிந்து சூட்டைச் சுமந்து சென்று போரிடுவார்கள். பின்பு கடா விட்டு நெல்லைப் பொலி செய்வார்கள்.

வாணிகம் :—இக்காலத்தே கருப்பாலைகள் இருந்தன. நெல்லையும் கரும்பின் பாகையும், மலரையும், இளநீரையும், வெற்றிலையையும், பழுக்காய்களையும், பழங்களையும், ஓர்க்கோலை, சங்கம், பவளம், முத்து, உப்பு முதலிய கடல்படு பொருள்களை யும், அவரை துவரை முதலிய புன்செய்த் தானியங்களையும் வண்டிகளிற் கொண்டுபோய் இடந்தோறும் விற்றுவந்தன ரென்பது தெரிகின்றது. பெரிய தனவந்தர்களாகிய வணிகர்

களுக்கு அவரவர் தரத்திற் கேற்ப அரசராற் பட்டப்பெயர் களும் பொற்பூ முதலிய பணிகளுங் கொடுக்கப்பட்டன.

இதனை,

"பட்டமும் பசும்பொற் பூணும் பரந்தொளி நிழற்றுந் தீந்தேன்
அட்டுந்தா ரலங்கன் மார்ப ராவணங் கிளக்க லுற்றேன்"

என்றதனாலும் 'எட்டி காவிதிப் பட்டந் தாங்கி' எனப் பெருங்கதையிலும் 'எட்டிப் பூப்பெற்றிரு முப்பதிற் றியாண், டொட்டிய செல்வத் துயர்ந்தோ னுயினன்' என மணிமேகலை யினும் இவ்வாறே கூறப்பட்டிருத்தலானு மறிக. சுரங்கங்களை வெட்டிப் பொன் முதலிய உலோகங்களைக் கொண்டு வந்தார்க ளென்பதுந் தெரிகிறது.

இராசாங்கம் :—இக்காலத்துச் சனங்கள் அரசனிடத்தே அதிக மரியாதை பாராட்டி வந்தார்கள். அரசனும் குடிகளை மிக்க அன்புடன் பாதுகாத்து வந்தான். யோக்கியதையும் கல்வியுமுள்ள அமைச்சர்களு மிருந்தனர்.

(தொடரும்)

கருமை

[திருக் கபசம் எழுதியது.]

(ருகக-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒளிக்கு மிருளுக்கு முள்ள பகை, அமரர்க்கு மவுணர்க்கு நடந்ததாகக் கூறப்படும் பெரும் போர்களிலொருவாறு உருக் கொடுத் தமைக்கப்படுகிறது" என்று செல்வி சிலம்பு 7. பரல் 4, பக்கம் 208ல் கூறினோம். புராண இதிகாசங்களில் அமர ரையு மவுணரையும் பற்றிக் கூறியிருப்பவை, இக்கூற்றுக்கு எத் துணைச் சார்பளிக்கக் கூடியவை யென்பதை யாராய்ந்து பார்த் தோம். பார்த்தவளவில் அமரரை யொருவகை யவுணரென்றும், அவுணரை யொருவகை யமரரென்றுஞ் சொல்லக்கூடுமே யன்றி, இவர்களை முரண்பட்ட விருதிறத்தினர்களென்று சொல்லத்தக்க

சான்றுகளில்லையென வறிந்தோம். ஆயின், தேவர்க்குந் தானவர்க்கு நிகழ்ந்த போர், ஒளிக்கு மிருளுக்கு முள்ள பகையைக் குறித்தது யாண்டு நம் நாட்டு நூல்களி லில்லைகொல்? முப்புர மெரிந்த வரலாறுகொண் டிதற்கு விடை யிறுக்குதும்.

முப்புர மெரிந்த செய்தி, மும்மலங்களுஞ் சிவனால் நீக்கப்படு முண்மையைக் குறிக்கு மோர் உவமை யென்பது

'முப்புரமாவது மும்மலகாரியம்'

என்ற திருமூலர் கூற்று னறியக் கிடக்கின்றது. சிவத்தின் முன் மலமழியுமென்ற கருத்தைப் புராண முறையிற் சிவத்திற்கு மரக்கர்க்கு நடந்த சண்டையாகக் காட்டியுளது.

தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல் போல்சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலின்.

(பாலைக்கலி, 2)

என்ற விடத்து, 'மூ வெயில்' அல்லது, முப்புரம்; அரக்கருறையரண்களாகக் கருதப்படுகின்றன வென்பது வெளிப்படை. கமலாக்ஷன், வித்யுன்மாலி, தாரகாக்ஷன் எனும் பெயருடைய மூன்றரக்கர்கள், இரும்பு, வெள்ளி, பொன்னாலாகிய மூன்று புரங்களைப்பெற்று, எல்லோர்க்கும் பேரிடையூ றியற்றி வந்தன ரென்பதும்; இது கண்ட தேவர்கள் சிவனை யடைக்கலம் புக, அவர் தேரேறிச்சென்று முப்புரங்களையு நகைத்தெரித்தன ரென்பதும் புராணம். சிவமாகிய ஒளிக்கு மலமாகிய விருளுக்கு முள்ள முரண்பாடு ஈண்டு நிரம்பத் தெளிவாய் நிறுவப்பட்டுளது. ஒளியு மிருளுஞ் செம்மையுங் கருமையு மாமன்றோ?

மக்கள் கடவுட்டன்மை யெய்துதற் கிடையூறாக நிற்கு மாணவ முதலிய வழுக்குகளை யரக்கர்வா ழரண்களாக நிறுத்தி, யாவுங்கடந்த தொன்முதலிலிருந்து தோன்றுமொரு வனற்பொறி

யாவைவை வென்தொழியவைத்தமை, தோன்றுவற்றிற்குத் தோற்றங் கொடுத்துப் பேசு முறையில் மிகப் போற்றுதற் குரித்து. ஆணவ மிகுங்கால் நல்லறிவு தடுமாறிச் செந்நெறி மறையும். ஆணவ மிகுந்தவன் அரக்கனேயாவான். ஏனெனின், அவன் தனதின் பத்தையே பெரிதாகக் கொண்டு, பிறரை நசுக்கிப் பெருந்துன்பம் விளைப்பான். மற்ற மக்களைத் தமக்கின்ப மூட்டுங் கருவிகளாகக் கருதியாளுதலும், இதற்கவர் ஒருப்படாவிடின், தமது வலியா லவரையடக்கி வருத்துதலு மரக்கர் தன்மையி னடையாளங்க ளாம். இத்தகைய வவுணர் பலர் இந்நாளுமுளர். இவர்கள் சென்ற விடமெல்லாமழிவே விளையுமாதலின், முப்புர வவுணர்களால் யாவர்க்குங் கேடுண்டாயிற்றென்று புராணத்துட் கூறினர்.

முப்புர மெரிந்த வரலாற்றில், அழுக்கு, அவுணர், இருள் என்பன திரண்டொருபுறமாகவும்; தூய்மை, இறைவன், ஒளி என்பன வொன்றி மறுபுறமாகவு மணிவகுத்து நிற்கின்றன. இந் நிலையில் போர் நிகழ்தல் இயல்பாமன்றோ? போரென்ற கருத்துக் கிசையத் தேரொன்று வகுத்தார் புராணத்தில். இத் தேருக்கு நிலந் தட்டாகவும், ஞாயிறுந் திங்களு முருளைகளாகவும், நால் வேதங்கள் குதிரைகளாகவு மமைந்தன வென்பர். சிவனார் நெற் றிக்கண் திறந்து நகைத்ததனாலேயே முப்புரங்களு மெரிந்தன வெனினும், மும்மலங்களு முதல்வனு லழிவுறு மென்பதற் கறிகுறி யாகக் கோவில்களிலிந்நாளுந் தேரிழுத் தூர்வலம் வருதல் வழக்க மாயிருக்கிறது. அதன் பொருளை யுணர்வோர் நூற்றுள் எத் துணை பேர்! உணர்ந்தவருள்ளுமதைப் பிறர்க்கெடுத்துரைக்கும் பெருந்தன்மையுடையோர் எத்துணைபேர்? தேரென்பது போருடன் பொருந்தியதாயிற்றே; சிவனார் தேரேறிச் செல்லுங் கருத்தென்னை யென்று கேட்குமாற்றலுமில்லா நிலைமையில் மக்களிற் பெரும் பாலோருளர். பொதுமக்க ளிவ்வுண்மைகளை யறியு மதுகையிலா தார்; ஆதலி னவர்க்கவற்றை யுணர்த்துதல் கூடாதென்பது படிற்றுச்சொல்லாகும்.

ஆணவ முதலாகிய மலங்கள், நீரானீங்கும் புறவழுக்குப் போலாது, பொன் வெள்ளி முதலிய உலோகங்களிற் கலந்து

நின்று, நெருப்பாற் சுட்டாலன்றி யகலாத உள்ளழுக்கை யொத்தவை யென்பதை விளக்குதற் பொருட்டு, முப்புரங்களுந் தீயாலழிந்தன வென்று நுவலப்படுகின்றது. இதற்கரணுக, முப்புரங்களு முறையே கரும்பொன், வெண்பொன், செம்பொன்னுலாகியவையென்று புராணங் கூறும். மிகத் திண்ணியதாகிய ஆணவமலத்தை இரும்பாகவும், மாயை காமியமாகியவற்றை முறையே வெள்ளியாகவும் பொன்னுகவும் புகல்வதால் மும்மலங்களின் தன்மை ஓருவாறு புலப்படுகின்றது. தமிழிலக்கணத்தில், வல்லினம், இடையினம், மெல்லினம் எனும் மெய்வகைகள், ஆணவம், மாயை, காமியங்களைக் காட்டுங் குறிகளாகும். எழுத்துக்களை உயிரென்று மெய்யென்றுங் கொண்டதனுலேயே, தொல்காப்பியமெழுதப்படுவதற்கு நெடுங்கால முன்னரே, உயிரையு முடலையும் பற்றி நுட்பமான கருத்துடையராய்த் தமிழரிலங்கின ரென்பதைப் பேதையு மறியலாகும். வல்லின மெய்யின்மே லேறிய உயிர்பெறுந் திண்மை ஆணவத்திலடைபட்ட சீவன் எய்தும் உரத்தை யறிவிக்கின்றது. 'க்' என்ற மெய்யெழுத்தைக் கூட்டுவதற்கு அடிநாவும், அதற்கு நேர் மேலேயுள்ள அண்ணமும் பொருந்திய நிலையில், அகரவுயிர் அதிற் பாயுமாயின், 'க' எனு மெழுத்துப் பிறக்கின்றது. அப் பிறப்பு முறையானே, அகரவுயிர் அடைபட்டது விளங்குகிறதன்ருே? அடைபட்ட வுடனே, உயிர் தனது உண்மைத்தன்மை நீங்கி, உடலின் தன்மையைப் பெறுகிறதென்பதைத் தெரிவித்தற் பொருட்டு, ககர ஒற்றின்மே லேறிய அகர வுயிருக்குப் புள்ளி நீங்கின ககர உருவங் கொடுக்கப்படுகிறது. இங்ஙனங் ககர மெய்யிற் பதிந்த அகரவுயிர், தானடைபட்ட மெய்யை விட்டு விலகி நிற்கு மாற்றலின்றி, அதனேடொன்றுபட்டு வாழ்க்கை நடாத்துகின்றது. முப்புரங்களிலிருப்பரண் பெற்ற புரமிதுவாம். இங்ஙனம் பிற உயிர்களு மெய்களுங் கூடிச் சீவர்களைப் பற்றித் தமிழர் கொண்ட கருத்தை யுணர்த்துந் திறத்தை யறிந்து வியப்பெய்தி யொடுங்குதும்.

மூவெயிலு மழியும்படி சிவனுர் போர் செய்யப் புறப்பட்ட காலத்தே, பற்பல தேவர்களு மொன்று சேர்ந்து, முக்கணனுர்

கடவிய தேரினுறுப்புகளா யமைந்தன ரென்றும் புராணங் கூறு கின்றது. அங்ஙனமாயின், அமரர் ஒளியைச் சார்ந்தும், அரக்கர் இருளைச் சார்ந்தும் நிற்கின்றனர். நெற்றிக் கண்ணினின்றும் புறப்பட்ட தனற்பொறி யென்று கொளப்படினுமது இறைவனது கருணையால் உயிர் பெறுகின்ற விளக்கத்தையே குறிக்கும். ஆதலின், ஒளியாகிய கடவுளுடன் தேவர்களும், மலத்துட னரக்கர்களு மீண்டிசைபடத் தோன்றுகின்றனர். இருளுக்கு மொளிக்கு முள்ள பகையை அவுணர்கட்குந் தேவர்கட்கு நிகழ்ந்த போராகத் தீட்டும் வழக்கமொன் றுண்டென்று முன் யாம் கூறிய தற் கிஃதொரு சிறந்த வெடுத்துக்காட்டாகின்றமை காண்க.

அரக்கருந் தேவருமொன்றுபட்டும் வேறுபட்டு நிற்கு நீர்மை யையின்னுஞ் சிறிது தொடர்வாம். சாவா மருந்தொன்று வேண்டி யொருகால் தேவர்கள் பாற்கடலைக் கடையத்துணிந்தனர். இதற்கு மந்தர மலையை மத்தாக நிறுத்தி வாசுகி யெனும் பாம்பை நாணாகப் பூட்ட வேண்டிய தின்றியமையாததாயிற்று. இதன்பின், தேவர்க ளிருபிரிவினராய் நின்று மலையிற் பூட்டிய நாணை முன்னும் பின்னும் பிடித்திழுத்திருக்கலாம். ஆனால், ஆற்றலின்மையாலோ, வேறெதனாலோ, தேவர்க ளரக்கரினுதவியை நாடினர். அரக்கரு மிதற்கியைந்து தேவருடன் பாற்கடலில் வந்து கூடினர். பாம்பின் தலைப்புறத்தை யவுணரும், வாற்புறத்தைச் சுரரும் பிடித்திழுத்த னர். திருமாலிவர்களிடையே நின்று இருசாரார்க்கு முதவினர். அரவின் தலையை யவுணர்கள் பிடித்திழுத்த தறிவின்மை பற்றியோ பெருமிதம்பற்றியோ? இஃதெவ்வாறாயினுமாக. கயிறுபோ லுருவப்பட்ட பாம்பு பெரிதும் வருந்தி யாவற்றையு மழிக்கு மாற்றல் பொருந்திய கொடிய நஞ்சைக் கக்கிற்று. நஞ்சின் வெப்பந் தாங்க முடியாமல் தேவரும் யாவரு மோட்டம்பிடித்தனர். சாவா திருத் தற்பொருட் டமிர்தங் கடைந்தெடுத் தருந்தப் போனவர், சாவு பயக்கு நஞ்செழக்கண் டஞ்சியோடியது நகைக்கிடனாகின்றது. தலையைப் பிடித்திருந்த வவுணர் தப்பியது தம்பிரான் செயல்? ஒருவர்க் கொருவரெதிர் நின்றிழுத்தவர், ஒன்றாக்கூடி யோடினர்! சிவப்பருங் கரியருமொருவர்மே லொருவர் விழுந்து புரண்டனர்.

கருமையுஞ் செம்மையு மயங்கித் தோன்றும் விந்தை என்னே! இன்பங்கள் பலவற்றை நன்கு நுகர்வதற்காக மூவா மருந்து கொணரச் சென்றவர், முக்கண னடி வீழ்ந்து, பாம்புமிழ்ந்த கடுவினால் வந்த துன்பந் தவிர்க்க வேண்டுமென்று முறையிட்டனர். இவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கிச் சிவபிரான் நஞ்சை யெடுத்தருந்தினர்! இது புராணம்.

ஈண்டுக் கருமையுடன் பொருந்திய பொருளென்னவெனின், அரவத்தினின்றும் வெளிவந்த நஞ்சு கரியதா யிருந்ததென்பதே, நஞ்சுக்குங் கருமைக்கும் பொருத்த மென்னே? நெருப்பென்றபோது சூடென்றவெண்ணம் பிறக்குமாறு, நஞ்சென்றவுடனே கருப்பென்ற நினைவு தோன்றுமோ? இல்லை. ஆயினும், யாவற்றையு மெரித்தழிக்க வல்லதாகிய வொன்றைக் கரியதென்று கொள்வதிலொரு விழைபுண்டு. இவ்விழைபினாலேயே சிவனுண்ட கடு கரியதென்று சொல்லப்படுகிறது. பாற்கடல் கடைந்ததும், பாம்பு நஞ்சுமிழ்ந்ததும், செய்யா வினைகள் செய்து மக்கள் தேடிக் கொள்ளுந் தீமையைக் குறிப்பனவோவென் றையுற விடமுண்டாகின்றது. இவ் வையம் தகுதியுடைத்தாயின், மக்களின் வினைப் பயனைத் தானே தாங்கி,யவர்களை யாண்டுகொள்ளுந் தனித்தன்மை சிவனார்க்குரித்தாம். பிழை பொறுத்தருள் செய்வது மக்களுட் சிறந்தவர் தன்மை யெனின், இறைவன் தன்மை, இதனினு மெத்துணைச் சிறந்திருக்கும்! நிற்க, முப்புரமெரித்த பித்தனார், ஆலமுண்டு கழுத்திற் கரியராகிக் காலகண்டன், நீலகண்டன் எனப் பெயர் பெற்றனர். சிவன் கழுத்தில் விளங்குமிக் கருமை மிக வழகிதென்று போற்றப்படுகின்றது.

"கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே"

(புறநானூறு, கடவுள் வாழ்த்து)

"நஞ்சினது கருப்பு, திருமிடற்றை யழகு செய்தது, இக்கருப்பு வேதம்பயி லந்தணராற் புகழவும்படும்". கருப்பு அழகாகியது யாதுபற்றி? பவழமேனியி லிடையே தோன்றுவதனாலோ, அன்றி, அது அடியாரை யாட்கொள்ளுங் குறியாவதாலோ?

(தொடரும்)

முத்துத் தாண்டவர் சரித்திரம்

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M.A., L.T.]

சிதம்பரம் ஸ்ரீ சபாநாதர் பேரில் முத்துத் தாண்டவர் பாடி யருளிய கீர்த்தநம்-பதம் என்றொரு புத்தகம் நெடுநாளாகத் தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. யான் பார்த்தவைகளுள் பழைய பிரதி 1870ஷு மே மீ அச்சிடப்பட்டது. மாணிக்கவாசக சுவாமிகள் பெற்ற பேற்றை இவர் வேண்டிப் பெற்றார் என்று ஒரு கதை எங்கும் வழங்குகின்றது. இவர் சிறந்த பக்தர் என்பதிற் சிறிது மையமில்லை. இவருடைய வரலாறு அப் பழைய பிரதியி லெழுதப்பட்டபடியே பிற் காலத்துப் பதிப்புக்களிலும் காணப்படுகின்றது. அதனை இங்குத் தருகின்றோம்.

'சீர்தரு காவிரி திகழ் சோழ நாட்டில் அடியார்க்கருள் செய்யும் பொருட்டுப் பரமசிவம் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிரா நின்ற தலங்களுள் ஒன்றாகித் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரஞ் செய்து ஞானப்பாலுண்டருளிய மகா க்ஷேத்திரமாகிய சீகாழியில் வீற்றிருக்கின்ற தோணியப்பருக்கு வாச்சியத் தொண்டு செய்யும் பேறுபெற்ற குலத்தில் தோன்றிய இவர் தாண்டவனென்னும் பெயர் பெற்றுச் சிவநேசத்துடன் வளர்ந்து வருகையில் முன் வினையினால் கர்ம வியாதி யொன்று சம்பவிக்க, அதனால் தங்கள் குலத்துக்குரிய தாக்ய தொழில் கற்றுக்கொள்வதற்கில்லாமல் காலந்தோறும் ஆலயத்திற்குப் போய்ப் பிரமபுரீசரையும் திருநிலை நாயகியையும் தோணியப்பரையும் பயபக்தியுடன் தரிசனஞ் செய்தும், மற்றைக் காலங்களில் அந்தச் சிவாலயத்தொண்டு செய்கின்றவளாய்ச் சிவநேசத்துடன் சிவநாம கீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும் ஒரு தாசி வீட்டுக்குப்போய் அந்தத் தோத்திரத்தைக் கேட்டுக்கொண்டு மிருப்பர். அவள் சுற்றத்தாருக்கும் இவர் சுற்றத்தாருக்கும் அன்னியோன்னிய மின்மையால்

அவள் வீட்டுக்குப் போகிறது சம்மதி யில்லாமல் இவர் சுற்றத் தார் இவரிடத்து வெறுப்புற்று இவரை ஆதரணை செய்யாம லிருந்தனர். அப்படி யிருக்கையில் ஒருநாள் இவர் மிகவும் மனவருத்த மடைந்து சிவாலயத்தில் போய்ச் சுவாமியையும் அம்மையையும் தரிசித்துத் தோத்திரம் பண்ணிக்கொண்டி ருந்து, பசியினால் சரீரத்துக்கு இளைப்புண்டாகச் சோகத்துடன் வாகனக் கிடங்குக்குள் போய்ப் படுத்துக்கொண்டு சிவத்தியா னத்துடனே நித்திரை போய்விட்டார். அது அந்தக் கோயில் ஸ்தானிகருக்குத் தெரியாமையால் அவர்கள் அர்த்த ஜாம மானவுடன் கோயில் திருக்காப்பிட்டுக் கொண்டு போய்விட்ட னர்.

'அவர்கள் போய்விட்ட பின்பு சற்று நேரத்துக் கெல் லாம் இவர் நித்திரைநீங்கி யெழுந்து மெய்ப்பிணியினாலும் பசிப் பிணியினாலும் வருந்தித் தோணியப்பரைத் தோத்திரஞ் செய் தார். உயிருக்குயிராய் எங்கும் நிறைந்திருக்கும் பரமசிவம் அன்பனது வருத்தத்தைத் திருவுளங்கொண்டு தம் மிடப் பாகத்து உமையவளைப் பார்த்தருள, அந்தக் குறிப்பை யுணர்ந்துகொண்டு சகல உயிர்களையும் பெற்றவளாகிய உமைய வள் கிருபை கூர்ந்து அந்தக் கோயில் பெரிய குருக்களுடைய பத்துவயதுள்ள குமாரத்தியைப் போல் வந்து வியசனப்படு கிறவரைப் பார்த்து, "நீ ஏன் இப்படி வியசனப் படுகிறாய்?" என்ன, இவர் "தாயே, நான் பூர்வம் என்ன பாவஞ் செய் தேனோ தொலையாத கர்மவியாதி சம்பவிக்க அதனால் வருத்தப் படுகிறது மன்றி வறுமை நோயென்ப தொன்று நேரிட்டத னாலும்வருந்துகின்றேன்" என்று சொன்னார். அதைக்கேட்டு அம்மை "நீ வியசனப் படவேண்டாம். உனக்குச் சம்பவித்தி ருக்கிற வியாதியும் வறுமையும் நீங்கி நீ சௌக்கிய மடை வதற்கு ஒரு உபாயஞ் சொல்லுகிறேன். ஆனால் இப்போது உனக்கு மிகுந்த பசியுண்டாயிருப்பதுபோற் காண்கிறது. அந் தப் பசிதீர அன்னங் கொடுக்கிறேன். சாப்பிடு" என்று கோயில் அன்னம் வட்டகையுடன் கொடுக்க, இவர் வாங்கிப்

புசித்துப் பசி தீர்ந்தவுடன் "என் தாயே, இந்த வியாதி நீங்கத் தக்க வகை எதுவோ அதனைச் சொல்ல வேண்டும்" என்ன, கோயில் குருக்கள் குமாரத்திபோல் வந்திருக்கும் பார்வதி யம்மை "நீ சிதம்பரத்துக்குப் போய்ச் சபா நாதரைப் பாடினால் இந்த வியாதி நீங்கிச் சௌக்கிய மடையலாம். இதுதான் உபாயம்" என்று சொல்ல, 'இவர், எனக்குப் பாடத்தெரியாதே! நான் என்னென்று பாடுவேன்?" என்று சொன்னார். "நீ அதைக் குறித்து யோசிக்க வேண்டியதில்லை. சிற்சபைக்கெதிரில் நின்று தரிசிக்கும்போது அங்குத் தரிசனத்துக்கு வந்திருக்கும் திருக்கூட்டத்தாராலே என்ன சொல் உண்டாகிறதோ அந்தச் சொல்லை முதலாக வைத்துக்கொண்டு பாடத் தொடங்கினால் சபாநாயகர் கிருபையினாலே பாட வாக்கு உண்டாகும்" என்று சொல்லி உமையவள் ஒரு சோதியாக மறைந்து விட்டாள். அப்படி மறைந்துவிடவே இவர் அச்சமும் மிகுந்த துயரமுங் கொண்டு, என் அஞ்ஞானத்தினாலே குருக்கள் குமாரத்தி யென்றே நினைத்திருந்தேனே! லோக மாதாவாகிய பார்வதியா ரென்று தெரிந்து கொள்ளாத பாவியானேனே! இவ்வளவெல்லாங் கட்டளையிட் டருளிய என் தாய் தன்னுடைய உண்மையுந் தெரிவித்து எனக்கு நேரிட்டிருக்கும் வியாதியையும் இப்போதே தீர்த்துவிட லாகாதா? சிதம்பரத்துக்குப் போகும்படி கட்டளையிட்டருள வேண்டுமா? ஆனால் திருவுளப்பாங்கு எப்படியோ அது யாரால் அறியத் தக்கது? ஒருவராலும் அறியத் தக்கதன்று என்று எண்ணிக் கொண்டு அது முதல் நித்திரை செய்யாமல் திருநிலைநாயகி சன்னிதிக் கெதிரில் வந்து தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார்.

'அப்படி யிருக்கையில் உதயகால மானதால் ஸ்தானிகர் முதலானவர்கள் போய்த் திருக்காப்பு நீக்கி உள்ளே சென்று அம்மை சன்னிதியில் வந்து, "நீ இங்கே எப்படி வந்தாய்? உன்னை உன் வீட்டார் தேடுகிறார்களே" என்று வினவ, இவர் தாம் வந்ததும் தமக்குக் கிடைத்த நன்மையையுஞ் சொல்ல, அவர்கள் கேட்டு, குருக்கள் வீட்டிலிருந்த வட்டகை இவ

ரிடத்திலிருப்பதைக் கண்டதுமன்றி இவர் முகத்தில் ஒரு தேஜசு விளங்குவதையும் பார்த்து ஆச்சரியமடைந்து, முன் போல் தாண்டவனென்று அழைக்க மனம் ஒவ்வாமல் அன்று முதல் முத்துத் தாண்டவனென்று உபசாரமாக அழைக்கத் தொடங்கினர்.

'முத்துத் தாண்டவர் திருநிலை நாயகி கட்டளைப்படி பொழுது விடிந்தவுடனே புறப்பட்டுச் சிதம்பரத்துக்குப் போனார். போனவர் தில்லை யெல்லையைக் கண்ட மாத்திரத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து உள்ளே போய் வீதிப் பிரதக்ஷிணஞ் செய்து தில்லை மூவாயிரவர் வாசஞ் செய்யும் வீதியையும் வணங்கி ஆலயத்துள் சென்று சிவகங்கை யில் ஸ்நானஞ் செய்து நித்தியானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஈரவுடையுடன் சென்று சன்னிதானத்தில் அஷ்டாங் கம் நிலமுறப் பணிந்து துதிசெய்து அன்பின் மிகுதியால் மன முருகிப் புளகமடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருகப் பரவச ராய் நிற்கையில் நடேச மூர்த்தியின் திருவருளால் தரிசனத் துக்கு வந்திருப்பவர்களிடத்தில் ஒரு வாக்கு [பூலோக கைலாச கிரி] உண்டாக அதனைப் பல்லவியாக வைத்துக் கொண்டு ஒரு கீர்த்தனம் பாடித் தோத்திரஞ் செய்தார்.

'அப்படித் தோத்திரஞ் செய்வதைச் சபாநாதர் கேட்டரு ளித் திருவுளத்தில் களிகூர்ந்து அவருக்கிருந்த வியாதி நீங்கும் படி கடாட்சித்து ஐந்து பொற்காசு பஞ்சாட்சரப் படிமீது வைத்து எடுத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டருளினர். அந்தக் கட்டளையை மறுக்க அஞ்சிக் காசை எடுத்துக் கொண்டு, தமக்கு நேரிட்டிருந்த தீராப்பிணி தீரும்படி ஆனந்த நடேசமூர்த்தி கடாட்சித்தருளிய திருவருளின் பெரு மையை எண்ணி எண்ணிக் களிப்படைந்து, பின்னும் பல முறை அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து தோத்திரித்துப் பிரியா விடைபெற்றுக்கொண்டு சீகாழிக்குப் போயினர். அன்று முதல் தினந்தோறுஞ் சபைக்கு வந்து அம்பலவாண மூர்த்தியைத் தரிசித்து அவ்விடத்தில் என்ன சொல் தம

முடை செவிக்குக் கேள்வியாகின்றதோ அதனையே பல்லவியாக வைத்துக்கொண்டு கீர்த்தனமாவது பதமாவது பாடிச் சிதம்பரேசுரர் கட்டளையிட்டருள்கிற பணத்தையும் பெற்றுக் கொள்பவர் ஒருநாள் சிற்சபைக்கெதிரில் வந்து நிற்கும்போது சபாநாதர் கட்டளையினால் அங்குத் தரிசிக்கின்ற தொண்டர்கள் யாதொன்றும் பேசாமலிருந்தார்கள். அப்போது "பேசாதே நெஞ்சே" என்று ஒரு கீர்த்தனம் பாடிக் கட்டளைப் பிரகாரம் பஞ்சாட்சரப்படியில் வைத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு சீகாழிக்குச் சென்றார்.

'இவ்வாறு நடந்து வருகையில் ஒரு நாள் சீகாழியிலிருந்து புறப்பட்டுச் சிதம்பர தரிசனத்துக்கு வருகையில் கொள்ளிடமென்னும் நதியில் அதிகப் பிரவாகம் வந்து ஒருவரும் போகக் கூடாமையா யிருக்கவே சபாநாதரைத் தரிசிப்பதற்கில்லையே என்று ஏக்கங்கொண்டு கொள்ளிடக் கரைமேல் நின்று "காணாமல் வீணிலே காலங் கழித்தேனே" என்று ஒரு கீர்த்தனம் பாடினார். அந்தக் கீர்த்தனத்தைக் கேட்டருளிச் சபாநாதர் திருவுளத்தில் கிருபை கூர்ந்து பிரவாகம் விலகக் கட்டளையிட்டருள, அந்த நதியைக் கடந்து வருபவர் மனக்களிப்பினால் "தெரிசனம் செய்வேன்" என்று ஒரு கீர்த்தனம் பாடினார். பின்பு சிற் சபையில் வந்து சபேசனைக் கண்டவுடன் "கண்டபின் கண்குளிர்ந்தேன்" என்று ஒரு கீர்த்தனம் பாடினார். அதன் பின்பு ஒரு நாள் வரும்போது மார்க்கத்தில் தம்மைச் சர்ப்பந் தீண்ட அப்பொழுது,

[மோகனராகம் ஏகதாளம்]

பல்லவி

அருமருந்தொரு தனிமருந் தம்பலத்தே கண்டேனே

அநுபல்லவி

திருமருந்துடன் பாக மருந்து - தில்லையம்பலத் தாடு மருந்து
இருவினைக ளறுக்கு மருந்து—ஏழையடியார்க் கிரங்கு மருந்து. அரு

சரணங்கள்

௧. கொன்றைதும்பை யணிந்த மருந்து—கோவைமீதிற் படர்ந்த மருந்து
மன்றுளேநின் ருடு மருந்து—மாணிக்கவாசகர் கண்ட மருந்து (அரு)
௨. இந்திரரானவர் வானவர் தாமு—மிருடிகள்தமக் கெட்டா மருந்து
சந்திரர்சூரியர் காணு மருந்து—தானேமுளைத்துத் தழைத்த
மருந்து (அரு)
௩. திரித்தித்தித்தியென் ருடு மருந்து-தேவாதிமூவர்கள் காணு மருந்து
கருத்தைத்திருத்தி யிருத்து மருந்து—காலனைக்காலா லுதைத்த
மருந்து (அரு)

என்றொரு கீர்த்தனம் பாடினார். பாடியவுடன் விஷமிறங்கிற்று. இவ்வாறு சபாநாதர் பேரில் அநேக கீர்த்தனங்களைப் பாடித் தோத்திரஞ் செய்துகொண்டிருந்து சபாநாதர் கிருபையினால் அநேக மகத்துவம் விளங்கப்பெற்றுக் கடைசி நாளில்,

[ஆரபிராகம் ஏகதாளம்]

பல்லவி

மாணிக்கவாசகர் பேறெனக்குத்தர வல்லாயோ வறியேன்

அநுபல்லவி

காணிக்கையாகக் கொடுத்தே னுனக்கென்னை
யாணிப்பொன் னே தில்லை யம்பலவாணு (மாணிக்)

சரணங்கள்

௧. நோயும்வறுமையும் சண்டையிடாதே—நோக்கரைநோக்காக நோக்கி
தாயுந்தமரும் சலித்துவிடாதே—சந்தியில் வையாதே [விடாதே
ஆயுமிளம்பிறை சூடியமூர்த்தி—யத்துவிதமுத்தி புத்தியளித்துத்
தீயமறுமை யெதிர்நின்றுதள்ளுஞ்—சிற்சபைமந்திர சிதம்பரதேவா
(மாணிக்)

௨. கட்டிலைவிட்டுக் கிடத்துமென்னுதே—காலைக்கரங்களைக் கட்டுமென்
கொட்டிமுழக்கிட்டு கூகூவென்னுதே—கோரணி கொள்ளாதே [னுதே
எட்டியொருவர்புலம்பிவராதே—ஏழைப்பிணத்தை யெடுமென்றிடாதே
சிட்டர்தொழுந்திருக் கட்டளைமேவுஞ்—சிதம்பரதேவா திருநடராயா,
(மாணிக்)

௫. கட்டையின்மேல்வைத்துச் சுட்டுவிடாதே-கள்ளக்குழியிற் புதைத்து
பட்டும்பணியும் தரித்தயலோர்வந்து—பாலள்ளிக் குத்தாதே [விடாதே
கிட்டியொருவர் சடங்குசெய்யாதே—கேட்டவரெல்லாங் கிடைக்கத்
[தருமென்னச்
சிட்டிப்பவன்பணி லச்சபைமேவுஞ்—சின்மயரூபா சிதம்பரநாதா
(மாணிக்)

௬. அப்பரிலிங்கத் தடைந்தனரென்று—மாரூரர்வெண்கரி யேறின
செப்பரியதிரு ஞானசம்பந்தர்—தேசுடன் சென்றரென்றும் [ரென்றுஞ்
இப்படியென்னை யலைத்துவிடாதே—எம்மானிருந்த படியேயிருந்திடச்
செப்பருவீர நடம்புரிகின்ற—சிதம்பரதேவா சிவகாமிநேயா (மாணிக்)

௭. சிற்பரதற்பர மெய்ப்பொருளுங்கண்ட—சித்தரெல்லாம் நிறைந்து
தற்பதமாம்நாலாஞ் சத்திநிபாதமுஞ்-சாயுச்சிய மும்பெறவே[தெரிசிக்கத்
பொற்பூமாரி யிமையோர்சொரிந்திடப்—பொன்னூசலாடுந் திருவா
[திரைநாளிற்
கர்ப்பூரதீபம்போலென்றனுடலைக்—கனகசபையிற் கலந்துகொள்வாமே
(மாணிக்)

என்னும் கீர்த்தனம் பாடும் போது சிற்சபையில் ஒரு சோதி யுண்டாக அந்தச்சோதியில் விவேகத்துடன் கலந்து விட்டார்.' இதுவே முத்துத்தாண்டவர் கீர்த்தனப்பதிப்புக்களிற் காணும் சரித்திரம்.

இனி யான் சீகாழி வித்துவச்சிரோமணி முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கட்கு இதனைக் குறித்துக் கடிதமெழுதிய தன்மேல் அவர்கள் தயைகூர்ந்து தெரிவித்த சில விவரங்கள் இங்குத் தரற்பாலன: தேவதாசிகள் தேவாலய ஊழியத்திற் கென்று தன்னை யொப்புக் கொடுக்கும் விதத்தைத் தேவாலய ஊழியத்திற்கென்று தன்னைவிற்கும் விகிருதை, தன் குடும்பம் சந்ததி பெருகவேண்டுமென்னுங் கருத்தால் தான் ஒருத்தி ஆலயப்பணிக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் பிருத்தியை, தேவ பக்திமேலீட்டால் திருப்பணி செய்யும் பக்தை, பலவந்தத்தால் ஒருத்தியைப்பற்றி அவளைத் தேவ ஊழியத்திற்கென்றளிக்கும் ஹிருதை, ஆடல் பாடல்களில் வல்லவளாய் அரசன் முதலாயினரால் ஆலயவழிபாட்டிற்கு விடப்படும் அலங்காரை,

வேதனம் பெற்றுக் கொண்டு கோயிலில் ஆடல்பாடல் செய்து வரும் உருத்திரகணிகையென எழுவகையினர். உருத்திர கணிகை கோபிகை யெனவும்படுவள். இவ் வெழுவகையினருந் தவிரச் செல்வர் மனையில் தர்ம பத்தினிகட்குத் துணையராயிருப்பவர் தாசியெனப்படுவர். இவரன்றிக் காதற் பரத்தையர் சேரிப்பரத்தையர் முதலாயினோர் பலருளர். முற்கூறிய உருத்திரகணிகையர் வழித்தோன்றிய ஆண்பாலாரும் அவர் வழி ஆண் மக்களும் கீதாங்கத்திலும் அன்னார் வழித்தோன்றிய பெண் மக்களும் அவர்வழிப் பெண்மக்களும் நிருத்தாங்கத்திலும் கோயிலூழியஞ் செய்வர். கீதாங்கத்துப் பெண்ணும் நிருத்தாங்கத்து ஆணும் அவரவர் வழியினரும் விவாகஞ் செய்து கொள்வர். நிருத்தாங்கத்துப் பெண்கள் இந்நாட்டு உயர்ந்தோரோடு சம்பந்தப்பட்டு வாழ்வர். அத்தகையினருள் ஒரு மாது சம்பந்தர் கோவில் ஒரு முறை புதுப்பித்தவராகிய ஆதிமுத்துத் தாண்டவர் என்னும் வேளாளப் பிரபுவை மணந்து பெற்ற புதல்வர் பாடுவாராதற்குரிய முத்துத்தாண்டவர். இவர் வழியினர் 'பாடுவா'ரென்னும் பெயருடனே சீகாழியில் இன்றும் காணப்படுகின்றனர். இவர் அன்னை பரம்பரையினரும் இன்னும் உளர். இவர் காலம் கி. பி. 1635க்கு மேற்பட்டது. இவர் வழி வந்த பாடுவார்கள் இவர் கீர்த்தனைகளையும் கி. பி. 1757-ல் பிறந்த தில்லை விடங்கன் வேளாளர் மாரிமுத்துப் பிள்ளை கீர்த்தனைகளையும் அருணசலக் கவிராயர் கீர்த்தனை முதலியவற்றையும் பாடி வருகின்றனர் அவற்றைக் கேட்டே முதன்முதல் முத்துத்தாண்டவர் கீர்த்தனை வரலாற்றோடு அச்சிடப்பட்டது.

முத்துத்தாண்டவர் சபாநாதர் பேரில் பாடியருளிய கீர்த்தனம் பதம் என்னும் பதிப்புக்களில், முத்துத்தாண்டவர் கீர்த்தனம்-60, அவர் பாடிய பதம்-25, தில்லை விடங்கன் மாரிமுத்துப்பிள்ளை பாடிய கீர்த்தனம்-25, சீகாழி அருணசலக்கவிராயர் பாடிய கீர்த்தனம்-1, வைத்தீசுவரன் கோயில் குமாரசாமி கவிராயர் பாடிய கீர்த்தனம்-1, சிதம்பரம் அமிர்தகவி குப்பையபிள்ளை பாடிய கீர்த்தனம்-1 என்றிவை அடங்கியுள்ளன.

கைக்கிளைத் திணை

கைக்கிளைத் திணை

[இளவழகனார்]

கடிதிவளைக் காவார் விடுதல்; கொடியியல்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்தள் ஈங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்;
இவளைச், சொல்லாடிக் காண்பேன் தகைத்து.

(குறிஞ்சிக்கலி, உ௰.)

'மின்னற்கொடியி னியல்பினையும் எண்கோவையாகிய மேகலையையும் சில பூத்தொழில்க ளமைந்த ஆடையினையும் உடையளாய், நல்கூர்ந்தார்தம் செல்வம் மிக்க மகள் இவளொருத்தி இங்கே இருக்கின்றனள்; உரியவர்கள் இவளைக் காத்தல் செய்யாராய் இவ்வாறு புறத்தே விட்டுவைத்தல் கொடிது; இவளைத் தடுத்து உரையாடிப் பார்ப்பேன்' என்பது.

காவார் கலிங்கத்தள் என்பன, முற்றெச்சங்கள். 'காவாராய் விடுதல் கடிது' என்றமையின், அம் மகள் கண்டாரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகு வாய்ந்தவளென்பது பெறப்பட்டது. 'இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்'தென்பது, பாட்டிடைவைத்த பொருட்குறிப்பாகிய உரைவகை நடையென்க. என்னை ? 'சொல்லாடிக் காண்பே'னென்பதனால், ஒரு மருங்கு பற்றிய கேண்மையாகிய கைக்கிளைப் பொருட்குறிப்புப் பெறப்படுதலினென்பது. இனைய வெல்லாம் "பாட்டிடை வைத்த குறிப்பு"* என்பதனாற் கொள்க. தகைத்து, தடுத்து. 'ஈங்கிதோர் செல்வமகள்; விடுதல் கடிது; இவளைத் தகைத்துச் சொல்லாடிக் காண்பேன்' என்று உரைக்க.

காமம் நிரம்பாத இளம்பருவத்துப் பெண்ணொருத்தியைத் தலைமகன் காதலித்து மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி, அவளைப் புகழ்தலானும் பழித்தலானும் வேண்டுவன கூறி

* தொல், செய்யுள், கஎரு.

ஏதும் விடைபெறுனாய், முடிவில் தான் விரும்பிய காம உரைகளைத் தனக்குத்தானே சொல்லி மகிழ்ந்துகொள்ளுதல் கைக்கிளை யொழுக்கமாமென நிறீஇ ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணையியலில்,

" காமஞ் சாலா விளமை யோள்வயின்
ஏமஞ் சாலா விடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்
றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே "*

என்றொரு நூற்பா யாத்தார். இதுவே மேற்காட்டிய கலித்தொகைப் பாட்டின் பொருளுமாம். எனவே, இவ்வொரு மருங்குபற்றிய கேண்மையால் விளையுஞ் செயல்களெல்லாம் கைக்கிளைத்திணையுள் அடங்குமென் றறிந்துகொள்க. தகைமைபொருந்திய ஆண்மகனொருவன் அழகிய பெண்மகளொருத்தியைக் கண்டு விரும்புதலும், பின்னர் அவன், இப்பெண் வானுலக மகளிருள் ஒருத்தியோ அன்றி இம்மண்ணுலக மகளிருள் ஒருத்தியோ என்று ஐயுறுதலும், கடைசியிற் கண்ணிமைத்தல், பூமாலைவாடல் முதலிய ஏதுக்களால் அவள் மண்ணுலகத்துப் பெண்ணேயென்று துணிதலும், தலைவன் அவளைத் தனதுள்ளத்தே நினைந்து நினைந்து ஆற்றாமை கொள்ளுதலும், அப்பெண்ணின் பெற்றோரைப் பெருமையா யெண்ணிப் புகழ்தலும், அவள் அழகினைப் பாராட்டுதலும், புணர்ச்சி விரும்பித் தானே புகழ்தலும், அப்புணர்ச்சி நேராக்கால் தனது தனிமை கருதி இரங்குதலும், ஆற்றாமை மிகுதலின் அவளை வெளிப்பட இரத்தலுமான இச்செயல்களெல்லாங் காமவிருப்பம் நிரம்பாத தலைவிமாட்டு அவ்விருப்பம் பொருந்திய தலைமகனுக்கு நிகழுமாயின், அஞ்ஞான்று அவை ஆண்பாற்கூற்றுக் கைக்கிளைத்திணைத் துறைகளாகும். இங்ஙனமே காண்டலும், விரும்புதலும், உள்ளத்துநினைதலும், மெலிதலும், அம்மெலிவைக் கூறு

* தொல், அகத், ருக.

தலும், மீண்டுங் காண்டற்கு நெஞ்சு வலித்தலும், பகற்பொழுதை வெறுத்து மொழிதலும், இராப்பொழுதை முனிந்து பழித்தலும், கனவிற் புலம்புதலும், நெஞ்சொடுகூறி மெலிந்து கொள்ளுதலு முதலானவெல்லாந் தன் விருப்பத்துக்கு இணங்கி வராத காலத்தில் தலைமகனை நோக்கித் தலைமகளுக்கு நிகழுமாயினும் அஞ்ஞான்றும் அவை பெண்பாற் கூற்றுகளான கைக்கிளைத்திணைத் துறைகளேயாகும்; மேற்காட்டிய இத்துறைகளெல்லாம் புறப்பொருள் வெண்பாமாலையின், கைக்கிளைப் படலத்தில் முறையே கூறப்பட்டிருக்கின்றன. இனித் தலைவனுந் தலைவியுந் தமக்குட் பண்டைவிதி கடைகூட்ட ஒருவரையொருவர் எதிர்ப்பட்டு இருவருள்ளமும் ஒருள்ளமாய்ப் புணர்ந்து இயற்கைப் புணர்ச்சி முதலான நடுவண் ஐந்திணை யொழுக்கங்களால் திருமணப்பெருவாழ்வில் அன்பும் இன்பமும் ஒருங்கே ஊற்றெடுக்க வைகினரேனும், அங்ஙனம் வைகிய பின்னர் ஏதாமொரு பொழுது தலைவிக்குக் காமவெழுச்சி தோன்றுக்கால் தலைவனும், தலைவனுக்கு அவ்வெழுச்சி முகிழாக்கால் தலைவியுமாக ஒருவரை யொருவர் விரும்புதலும், அவ்விருப்பத்தால் காண்டல் உள்ளல் முதலான செயல்கணிகழ்தலும் அவர் தமக்குள் ஏற்படுமாயின் அஞ்ஞான்றும் அவை இக் கைக்கிளைத் திணையும் இத்திணையின் துறைவகைகளுமே யாகுமென்று துணிந்துகொள்க.

எனினும், இவ்வெல்லாவகையான கைக்கிளையொழுக்கங்களினும் ஆசிரியர் கூறியவாறு காமஞ்சாலா விளமையோள்வயின் காமஞ்சான்ற விளைஞனுக்கு நிகழுங் கைக்கிளையொழுக்கமே சிறந்ததொன்றும்; கைக்கிளைத் திணைக்கு உரிய சிறப்பான கருத்தெல்லாம் தலைவன் தலைவியரிருவருள்ளும் ஒருவர்பான்மட்டுங் காமக்குறிப்பு நிகழ்தலாம். காமக் குறிப்பு விரைவாய்த் தோன்றுதலும், உள்ளடங்காது வெளிப்படுதலுமெல்லாம் ஆண்மகனுக்கே உரியவாமென்பது கூறல்வேண்டா. பெண்மக்களுக்கு ஆண்மக்களைவிடக் காமக்குறிப்பு மிக்குத் தோன்றுமாயினும், அவர்தமக்கு அது விரைதலும் வெளிப்

படுதலுமில்லை. எனவே தலைவன் தலைவியரிருவருள்ளும் தலைவியைக்கண்டு தலைவன் காமுறுமாறு வைத்து உரைகூறுதலே மக்களியற்கைகளை நனி பெரிதும் அளந் தாராயவல்லார்க்குச் சிறந்த செயலாம். தலைவன்மாட்டுக் கைக்கிளையொழுக்கம் நிகழ்வதாயின், தலைவிமாட்டுக் காமக்குறிப்பு நிகழாதாகல் வேண்டும்; அங்ஙனம் நிகழாமைக்குக் காமஞ்சான்ற தலைவியினுங் காமஞ்சாலா விளைமையோளே சிறப்பின் உரியளாவள்; ஆகையாற்றான் முற்றுணர்வெய்திய முழுமுதற்கண்ணரான ஆசிரியர் தொல்காப்பியனார் காமக்குறிப்பு நிகழாத பெண்மகள்மாட்டு ஆண்மகன் காமுற்று நிற்குமாறு வைத்துச் சிறப்புத் தேற்றிக் கைக்கிளைத்திணைக்கு நூற்பா ஓதுவாராயினர்.

இனிக் 'காமஞ்சாலா விளமையோள்' என்று ஆசிரியராற் குறிக்கப்பட்டவள், மங்கைப்பருவ மடையுந் தகுதியையுடைய பெதும்பைப் பருவத்துப் பெண்ணாவள். பெதும்பைப் பருவமென்பது மங்கைப் பருவத்துக்கு முன் பருவம். இப் பருவத்திற் காமக்குறிப்பு நிரம்புமாறில்லை; மங்கைப் பருவத்தின்கண்ணேயே காமவிருப்பம் நிரம்பா நிற்கும்; எனவே பெதும்பைப் பருவத்துப் பெண்ணுக்குக் காமக்குறிப்பு உளதாயினும் அது முதிராமையின், அஞ்ஞான்று அவள் ஆடவரை விரும்பி நிற்கும் இயல்பினள் அல்லள். ஈதுணர்த்துதற்கே ஆசிரியர் 'காமஞ்சாலா' வெனவும், 'இளைமையோ' ளெனவுங் கிளந்தோதினரென் றுணர்ந்துகொள்க.

இனி 'முன்னைய நான்கும் முன்னதற்கென்ப'* என்னும் நூற்பாவும், 'முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே'† யென்னு நூற்பாவும் இக் கைக்கிளைத் திணைத் தொடர்பாய்த் தொல்காப்பியத்துட் காணப்படுகின்றன. இந்நூற்பாக்கள் தொல்காப்பியங் கற்பார்க்கு அதன் கருத்துரை தொடர்களில் ஒரு நெறிப்பட்டு நீரொழுக்கென ஓரே தொடர்பாய்ச் செல்லும் உணர்வினை முட்டுப்படுத்தித் தம்மாட்டு ஈர்த்து, ஆழ்ந்த

‡ தொல், அகத், ௫௨ † தொல், களவியல், ௧௬

தொரு நினைவாராய்ச்சியினை அவர்கட்கு விளைவியா நின்றன. இங்ஙனம் இடையிடையே வருவன தொல்காப்பியத்துள் வேறு சிலவும் உள. ஈண்டு 'முன்னைய நான்கு' மென்பதும், 'முன்னை மூன்று' மென்பதுமே கற்பார்தம் உணர்வொழுக்குக்குத் தடை செய்வனவாம். ஆசிரியர் நச்சினார்க்கினியர் முன்னை நான் கென்பன, 'இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும் ஐயமுந் தெரிதலுந் தேறலும் என்ற குறிப்பு நான்கா' மென்பர். தலைவன் தலைவியருள் ஒருவர் ஏனை யொருவரை நோக்கி அவருக்கு விருப்பம் நிகழாதவழி விரும்பி வருந்துதலே கைக் கிளையா மெனப்படுதலின், இயற்கைப் புணர்ச்சிக்கு முன் இரு வரும் ஒருவரை யொருவர் ஒத்த விருப்பத்தாற் காண்டலும் ஐயுறுதலுந் தெரிதலுந் தேறலுமெல்லாம் ஐந்திணையொழுக்கத் துட்படுவனவேயல்லாமற் கைக்கிளையொழுக்கத்துட் சார்வன வல்லவாம். இது கருதியே நச்சினார்க்கினியர் தாங் கூறிய உரைக்கு ஓர் ஒப்புரையுங் கூறுகின்றனர். அஃது, 'இவை தலைவி வேட்கைக் குறிப்புத் தன்மேல் நிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே, தன் காதன் மிகுதியாற் கூறுவனவாதலிற் கைக்கிளையாயிற்று' என்பது. இயற்கைப் புணர்ச்சிக்கு முன் காதலர் தமக்குட் காண்டலும் ஐயுறலுந் தெரிதலுந் தேறலு மெல்லாம் ஒத்த வேட்கையுடன் நிகழ்வனவே யல்லாமல், அவ் வேட்கை நீங்கி நிகழ்வனவல்ல. இதுவே அகனைந் திணை யொழுக்கத்துக்குச் சிறந்த பொருளாகும். தலைவி வேட்கை யைத் தலைவன் அறிதலும், தலைவன் வேட்கையைத் தலைவி அறி தலுங்கூட அக்காண்டல் தொட்டே அவர்தமக்குள் நிகழ்வன வாமென்க. காண்டலும், வேட்டலும், ஒருவர் வேட்கையை ஏனையொருவர் அறிதலும் எல்லாம் ஒரே நேரத்தில் இருவர்க் கும் நிகழுமென்பதே தெய்வப் புணர்ச்சி யென்பதற்கு அறி குறியாம். நுணுக்கமான இவ்வுண்மை யியல்பினை,

> அதுவே,
> தானே யவளே தமியர் காணக்
> காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்" *

இறைய, உ

என்னும் இறையனு ரகப்பொரு ணூற்பாவும், அந்நூற்பாவுக்கு ஆசிரியர் நக்கீரனர் கருதரிய உரைவளங்கள் கெழுமத் தெளி பொருளுணர்த்தி விளங்க உரைக்கும் விரிந்த உரைப் பகுதி யும் நன்கு தெளிவிக்கின்றன. 'தமியர் காண, தம் முணர்வின ரன்றி எதிர்பட என்றவாறு; அஃதேயெனின், இவர் தம் முணர்வின ரல்லராகின்றது காணுமுன்னுபவோ, கண்ட பின் னுபவோ, காட்சியோ டுடனுபவோ? ** இவர் காட்சி யானே தம்முணர்வின ரல்லரென்பது முடிக்கல் வேண்டும். எங்ஙனம் முடிக்குமா றெனின், காணுமுன்னே தம்முணர்வின ரல்லராகற் றன்மை யுடையராதலி னென்பது. ** (வேட்கை) காட்சியோடு உடனே கிளரும்; என்னை? இருட்டகத்து விளக் குக் கொண்டு புக்கால் விளக்கு வராத முன்னரும் இருள் நீங் காது; விளக்கு வந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்கு வரு தலும் இருணீக்கமும் உடனே நிகழும். அதுபோலக் காட்சியும் ஞானவொழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிக ழும். விளக்கினைக் காட்சியாகக் கொண்டு ஞானவொழுக்கங்களை இருளாகக்கொள்க. ** தமியராத லென்பது தம்முணர்வின ரல்லராதல். தம்முணர்வின ரல்லராத லென்பது என்னே வெனின், தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். இந்நான்மையுந் தலைமகற்கு வேட்கையான் மீதூரப் பட்டுப் புனலான் மீதூரப்பட்ட புற்போலச் சாய்ந்துகிடப்பது. இனித் தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பென்பன குணம். இந்நான்மையும் புனல் ஓடு வழியிற் புற்சாய்ந்தாற்போல வேட் கையான் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பது.**வேட்கை யென் பது என்னேவெனின், ஒருவரொருவரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசுபோலவும் நீர்வழி மிதவை போலவும் பான்மைவழியோடி இருவருயிரையும் புணர்விக்கும் என்பது' என்று வரும் அவ் வாசிரியர்பெருமானுடைய உரைக் கூறுகள் இயற்கைப் புணர்ச்சியின் இயல்பினை எவ்வளவு நுணுக் கமாகவும் விளக்கமாகவும் உண்மைபிறழாமலும் இனிமையா யும் விளக்கி நிறுத்துகின்றன வென்பது இங்குப் பெரிதும்

உற்று நோக்கற்பாலதாகும்; இவ்வுரை விளக்கத்தால், தெய்வப் புணர்ச்சி பொருந்துங் காதலர் தமக்குள் காட்சி நிகழும் நேரத்திலேயே வேட்டலும் வேட்கை யறிதலும் உடன் நிகழுமென்பது சிறிதும் ஐயுற வின்றித் தெளிவாய்ப் புலப்படுகின்றதன்றோ? புலப்படவே, இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழுங் காட்சியும் ஐயமுந் தெரிதலுந் தேறலுமென்பன ஒருமருங்கு பற்றிய கேண்மையினவாகாமல், இருமருங்கும்பற்றிய கேண்மையினவேயாகுமென்பது நன்கு பெறப்பட்டது. பெறப்படவே, அந் நான்குங் கைக்கிளை யிலக்கணத்தனவாதல் செல்லாமையோடு நடுவணைந்திணை இலக்கணத்தனவாதலும் இனிது வெளிப்பட்டதென்க. அற்றன்று 'இது கைக்கிளை இலக்கணம், தெய்வங்கொல்லோ மகடூஉக் கொல்லோ என ஐயமுற்ற ஐய நிலையுந், தெய்வ இலக்கணந் தீண்டா வாகலின் ஐயந்தெளிந்து மகடூஉவாதல் துவர உணர்ந்த அத்துணிவு நிலையுமெனக் கைக்கிளை யிலக்கணமாகச் சொல்லப்பட்டமையின்' காட்சி முதலான நான்குங் கைக்கிளை யிலக்கணமாமென்று ஆசிரியர் நக்கீரனாரே மேற்காட்டிய இறையனாரகப்பொருளுரைப்பாவுரையில் எடுத்துக் காட்டினாராலெனின், உணராது கூறினாய்; அவ்வெடுத்துக் காட்டுரை ஒரு சாரரை மறுத்துக் கூறிய உரையாம். தலைவன்றலைவிபர் ஒருவரை யொருவர் முதலிற் கண்டு, அங்ஙனங் கண்ட பின்னர் ஐயுற்று, ஐயுற்றபின் தெரிந்து, தெரிந்த பின் தேறித்தேறியபின் வேட்கை கொண்டு புணர்தலே இயற்கைப் புணர்ச்சியென்று ஒரு சாரார் கூறினர். அதற்கு நக்கீரனார் இயற்கைப் புணர்ச்சி யென்பது அஃதன்று; நீவிர் கூறிய காட்சியும் ஐயுறவும் முதலான நான்கும் வேட்கையோ டியையாமல் நிகழுகின்றமை தெரிதலின், அது கைக்கிளை யொழுக்கமாமென்றனர். இதுவே அவர் கருத்தாகுமாறு, 'காட்சியென்பது இருவருந் தம்முட் கண்ணுறுவது - ஐயம் என்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது - இவ்வகை நினைந்தபின்னைத் தெளிவு வருமாறு - தெரிந்த பின்னைத் துணியுமென்பது - துணிந்த பின்னை இருவருக்கும் வேட்கைமிகத் தம்முட் கூடுவது; இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், இது கைக்கிளை

யிலக்கணம் - ஈங்கு அகத்திணையுள் அஃதுரைப்பது திணை மயக்கமாகலின் மேலதே பொருள்' என்று மேலெடுத்துக் காட்டிய உரைக்கூற்றோடு தொடர்ந்து முன்னர்க் கூறப்பட்டிருக்கும் இவ்வுரைப் பகுதியினால் இனிதுணரக் கிடக்கின்றமை கண்டுகொள்க. எனவே இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழுங் காட்சியும் ஐயுறவும் முதலான நான்கும் வேட்கையோடு இயைந்தே தலைவன் றலைவியர்க்கு நிகழலின், அந்நான்கும் எவ்வாற்றானுங் கைக்கிளைத் திணையாகாமையும், இதனை நினைந்து பாராமல் நச்சினார்க்கினியர் முன்னைய நான்குமென்ற விடத்து அவற்றைக் 'கைக்கிளையாதற்கு உரிய'வென்று உரைத்தமை பொருந்தாமையும் அறியற் பாலனவாம். 'முன்னைய நான்கு மென்புழி 'முன்னைய' வென்னுஞ் சொல் வந்திருத்தலின், இந்நூற்பாவுக்கு முன் நூற்பாக்களில் இதன் றொடர்பாய்ச் சில கருத்துக்கள் ஆசிரியராற் றொகுத்துக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனமில்லாவழி 'முன்னைய நான்கு' மென்று ஆசிரியர் பின்னாற் கூறார். எனவே இவ்வாறு முன் தொடர்பு ஒரு சிறிதுங் காட்டாமல், நச்சினார்க்கினியர் நான்கென்பன காட்சிமுதலான நான்காமென்று தூக்குத்தொகையாய் உரை கூறினமை, பெரியதோர் இறும்பூதினையே விளைவியா நின்றது. ஆனால், இந்நூற்பாவுக்கு இவர்க்குமுன் உரை கூறிய இளம்பூரணர் தமக்குத் தோன்றியதோர் உரையினைத் தொடர்பு காட்டி எழுதினார். அந்தமட்டில் இவர் தொடர்பு தேற்றி உரை கூறினமையே நமக்கு மேலாய் நின்றது. தொல்காப்பியத்திற் கைக்கிளை யிலக்கணங் கூறுங் 'காமஞ்சாலா விளைமை யோள்வயின்' என்னும் நூற்பாவுக்குப்பின் பெருந்திணையிலக்கணங் கூறும்,

"ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிற
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே".*

---

* தொல், அகத், ருக.

என்றொரு நூற்பா கூறப்பட்டது. மற்றதன் பின்னரே 'முன்னையநான்கு முன்னதற் கென்ப' வென்னுமிது காணப்படுகின்றதென்க. எனவே இதற்குத் தொடர்புகாட்டி யுரைத்தல் கருதிய ஆசிரியர் இளம்பூரணர் முன்னைய நான்குமென்றதை 'முந்துற்ற நிலைமை நான்கு'மென்று பொருள்கொண்டார். கொண்டு, 'அவையாவன: ஏறாத மடற்றிறம், இளமை தீராத் திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறாகாத் திறம் என்பன'.** 'ஏறா மடற்றிறம், வெளிப்பட இரத்தலாம்; இளமை தீராத்திறம், நலம் பாராட்டலாம்; தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், புணரா விரக்கமாம். மிக்க காமத்தின் மாறாசாத் திறம், நயப்புற்று இரங்கலாம்' என்று உரைகூறினர். இதுவும் பொருந்துவதன்று, என்னை? இவர் காட்டும் வெளிப்பட விரத்தலும், நலம்பாராட்டலும், புராணவிரக்கமும், நயப்புற்று இரங்கலு மென்பன, ஒருமருங்குபற்றிய கேண்மையினாலேயே யன்றி இருவயினொத்த காதலினாலும் நிகழா நிற்குமாகலி னென்பது. தொல்காப்பிய வகத்திணையியல் புறத்திணை யியல்களுக்கு ஆசிரியர் இளம்பூரணர், இயைபுள்ள இடங்களிலெல்லாம் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் கருத்தைத் தழுவியே பெரும்பான்மையும் உரையெழுதி யிருக்கின்றாரென்பது, அவருரையை முதலிலிருந்து ஈறுவரை ஒருமுறை தொடர்பாய் உற்று நோக்குவாரெல்லார்க்கும் இனிது விளங்காநிற்கும். எனவே அப்புறப் பொருள் வெண்பாமாலையின் கைக்கிளைப் படலத்திற் குறித்துக் காட்டிய வெளிப்பட இரத்தல், நலம்பாராட்டல், புணரா விரக்கம், நயப்புற்று இரங்கலென்னு நான்கையும் ஈண்டுத் தமதுரை யகத்தே எடுத்துக் காட்டுங் கருத்தும் இதற்குத் தொடர்பு காணுங்கால் ஆசிரியர் இளம்பூரணனார்க்கு நிகழ்ந்திருத்தல் வேண்டுமென் றுணரலாகும். அங்ஙனமாயின், மற்று 'முன்னைய நான்கு' மென்று கூறப்பட்டதன் உண்மைப் பொருள்கள் தாம் யாவையோ வெனின், இந்நூற்பா கூறப்பட்ட விடத்தே எதும் முன்பின் தொடர்புகள் காணப்படாமையின், இஃது ஆண்டு நிற்றற் குரியதாகுமோ வென்று

எமக்கு அந் நூற்பாவின்கண் பெரிதும் ஐயம் நிகழா நிற்கின்றது.

இங்ஙனமே இக் கைக்கிளை இலக்கணங் கூறுவதாகக் 'களவியற்'கண் வரும் 'முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே' யென்னு நூற்பாவும் ஆண்டு ஒரு சிறிதும் முன்பின் இயைபின்றி இடையே காணப்படுகின்றது; மேலும் அதற்கு நச்சினார்க்கினியர் 'முன்நின்ற அசுரமும் இராக்கதமும் பைசாசமுங் கைக்கிளை யென்றற்குச் சிறந்திலவேனுங் கைக்கிளை யெனச் சுட்டப்படு' மெனக் கூறும் உரையுந் தினையளவு முன்பின் றொடர் பில்லாமையோடு ஆசிரியர் வரம்புறுத்து நிறுத்தும் பொருளதிகார வொழுக்கத்துக்குப் பெரிதும் மாறாயும் நிற்கின்றது. எனவே அஃதும் ஆண்டு நிற்றற்குரிய தாகுமோ வென்று எமக்கு அந் நூற்பாவின்கண்ணும் ஐயம் பிறவா நிற்கின்றதென்க. நூற்போக்குகளை நுணுகியுணரவல்லபெருமக்கள் இவைபோன்றவற்றை ஆராய்ந்து துணிவுரை தேற்றுதல் இன்றியமையாததாகும்.

இனி இக் கைக்கிளைத் திணையை வெண்பாமாலையார் புறப்பொருட்கண் இயைத்துத் தமது புறப்பொருள் வெண்பாமாலையிற் கூறினமையும் ஆராயற் பாலது. ஆசிரியர் தொல்காப்பியனார் இத் திணையை அகத்திணையோடு இயைத்தே

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" *

என்று நூற்பா ஓதினார். எனினும் அவர் இவ் வெழு திணைகளுள்ளும் நடுவணைந்திணையை மட்டுஞ் சிறப்பா யெடுத்து முன்னர் விளக்கி, இக் கைக்கிளைத் திணையையும் ஏனைப் பொருந்திணையையும் அகப்பொருட்குச் சிறப்பா யெடாமற் பின்னர்ச் சுருக்கமாய் விளக்கி அதனோடு அகத்திணையியலை முடித்திட்டார். இதனாலேயே நடுவணைந்திணை மட்டுமே அகத்திணை யெனப்படுதற்குச் சிறப்பினுரியதென்பது

* தொல், அகத், க.

ஆசகல் சுகனங்கோத வபிமனற் சுதன்றான் கேட்டு
மாசகல் வாசு தேவன் சரிதையை வரைந்து சீராய்ப்
பேசுவோர் கற்போர் கேட்போர் பெருமித மெய்திப் பின்னர்க்
கேசவ னடிய ராகிக் கிளர்பதத் தணுகு வாரே. (௩௬)

என்னும் செய்யுள்கள் புராணம் முடிந்ததைக் காட்டும். ஆயினும் 132 வதாக வைநதேயப்படலம் என்றொன்று 322 செய்யுளுடையது காணப்படுகின்றது. பாகவத நூலுக்கும் அதற்கும் சம்பந்தம் அதிக மின்று.

முதற் புத்தகத்தில் 4664 செய்யுள்கள் கொண்ட 78 படலங்களும் இரண்டாம் புத்தகத்தில் 4483 செய்யுள்கள் கொண்ட 54 படலங்களும் காணப்படுகின்றன. ஆகச் செய்யுள்கள் 9147.

புராண பாகவத மென்றொரு நூல் வடமொழியில் வேறாகப் பெருவழக்கா யில்லாமையால் வரதராஜ ஐயங்கார் பாகவதம் எவ்வளவில் வடமொழி நூலைத் தழுவிச் செய்யப்பட்ட தென்றுரைக்க வியலாது. ஆயினும் வரதராஜ ஐயங்கார் தமக்கு மூலமாகக் கொண்டது இப்பொழுது ஆரியத்தில் பாகவத மென வழங்குவதன்று கௌதம சங்கிதை கூறுமாறு இதனில் விரிந்ததொன்றென்பது வெளிப்படை.

சைவப்பெரியார் தனிக்கூட்டம்

இக்கூட்டம் திருநெல்வேலியில் 1929-வது வருடம் மார்ச்சுமீ 29, 30, 31-ந் தேதிகளில் மிகச் சிறப்பாகச் சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் **B.A., L.T. (Dy. Inspector of Schools)** தலைமையில் செவ்வனே நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல பகுதிகளாகிய தொண்டைநாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டிநாடு, நடுநாடு, கொங்குநாடு, ஈழநாடுகளிலிருந்தும் போந்த பல பேரறிஞர்களும், சைவசபைப் பிரதிநிதிகளும் குழுமியிருந்தனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நிலையத்தில் விஷயாலோசனைக் கூட்டமும் கணபதிவிலாச நாடகசாலையில் பொதுக்கூட்ட

"காமஞ் சாலா விளமை யோள்வயின்
குறிப்பறி வுறூஉ குறுகியாங் கவளோடு
இறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை"*

யென்றொரு நூற்பா வியற்றினர். வெண்பாமாலையார் இக் கைக்கிளை யொழுக்கம் புறப்பொருளோடு சிறிதாயினுந் தொடர்பிருத்தல் கண்டு தமது புறப்பொருள் வெண்பாமாலையி லியைத்துக் கொண்டார். ஆயினும், புறப் புறம் புறத்திலடங்கு மாறுபோல் அகப்புறம் அகத்திலேயே அடங்கி அகமெனப் படுதலே முறையாகுமாகலின், ஆசிரியர் தோல்காப்பியனார் அதனை அகத்திணைகளோடு இயைத்து அகத்திணையியலில் நிறுத்துரைத்தாரென் றறிந்துகொள்க.

தமிழுலகம்

[திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் B. A]

புது நூற்றாண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என் றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தந் தமிழுலகம் பெரிதுந் துன்புறத் தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடு நடுங்குகின்றது. அந்தோ! புதுநூற்றாண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமி ழுலகிற் செம்மைசான்று விளங்கிய நமது ராவ்பஹதூர். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் இவ் வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான்றிருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை! தமிழ்ப்புலவ ரில்லங்களிற் பனை யோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமி ழணங்கு நல்லாடை யுடுத்துத் தெலுங்கு கன்னடமாகிய பாங்கி மாரோடும் அச்சு வாகன மேறி நாடெங்கும் உலா வருமாறு செய்தற்கட் பேருக்க மெடுத்து உழைத்துநின்ற நம் பிள்ளை யவர்கள் காலஞ்சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது

* நம்பியகப், ஒழிபு, கூஉ.

ஆவல மெய்ப்பாட்டினை யடக்கவல்லார்? அவ்வாறாக யாம் எமது துன்பத்தை யடக்கப் புகுதலெவன்? மனத்தின்கணுள்ள துக்கம் வாய்விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே. அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

வாழ்க்கை

நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தூர் வைரவநாதபிள்ளை யவர்களது குமாரர். இவர் கி. பி. 1832-ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும், சுன்னாகம் முத்துக் குமாரசுவாமி பிள்ளை யவர்களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852-ஆம் வருடம் அக் கல்லூரியினின்றும் பரீட்சையிற் றேறிப் பட்டம் பெற்று வெளிப்போந்தனர். பின்னர்க் கோப்பாயிலுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய பெர்ஸிவல் துரையவர்களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப் போந்து தினவர்த்தமானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ்நூற் பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்க புகழ்விளைத்தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராய் அமரும்படி வேண்டிக் கொண்டனர். அங்ஙனம் அக் கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்திவருபவர் 1857-ம் வருஷத்து முதன் முதலில் ஏற்பட்ட சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினர். எனவே நமது தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலாசாலையில் முதலிற் பீ, ஏ. பட்டம்பெற்ற இருவருள் ஒருவராவர். பிள்ளையவர்கள் பீ. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக் கோட்டைக் கல்விச்சாலையில் உதவி உபாத்தியாயரா யனுப்பப் பட்டனர். ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தியோகத்திலமர்ந்து பலதுறைகளாலும் தமது

வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமை தவறுமை, ஆகிய நற்குணங்கள் காரணமாகப் புகழ்பெற்று விளங்கி 188?-ம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையினீங்கினுர். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும் போழ்தே 1871-ம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர். ஆகவே தாம் வேலையினீங்கினவுடனே 1884-ம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தாவாய் அமர்ந்தனர். அதன்மேல் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியா யிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில் அவர்க்கு மகப் பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

தமிழ்நூற் பதிப்பு

இதுநிற்க, குடந்தையி லிருந்தபொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ்நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர். அவ்வாறு அவர் பதிப்பித்த நூல்களுட் பெரும்பாலான சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாக விலைப்படாதனவுமாகிய இலக்கண நூல்களாம். தமிழின்மீது ஆர்வம் மிகுந்த இற்றைஞான்றிலும் அவைகள் பெரிதுங் கவனிக்கப்படுகின்றிலவாமாக அந்நாட்களில் அவை விலைப்பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் **தோல்காப்பிய நச்கினுர்க்கினியம், தோல்காப்பியச் சேனுவரையம், வீரசோழியம், இறையனுகரப்போரு ளுரை, இலக்கண விளக்கவுரை** என்பனவாம். பின்னர்த் தமிழிலக்கியங்களுட் பெரிதும் திரிசொற்களான் யாக்கப்பட்ட **தணிகைப் புராணமும்** சிறு காப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் **சூளாமணியும்** பிள்ளையவர்கள் முயற்சியான் வெளிப்போந்தன. இவை தம்முட் பல பகுதிகள் பிரதமகலா பரீட்சைக்கும், பீ. ஏ., எம். ஏ., பரீட்சைகட்கும், அவ்வக் காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்தப்பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச் செய்யுட் பழக்கத்தினையும், நுணுகியுணருங் கூரிய மதியினையும், ஆராய்ச்சி வன்மையினையும் பெரிதும் புலப்

படுத்துகின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கற ஆராய்ந்து தெள்ளிதிற் றெரித்துளர். இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத் தொகையுளொன்றாகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர். ஐயகோ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

புலவர் மதிப்பு

இவ்வாறு மிகப் பெருமைவாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப் புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்கு மதிக்கற்பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினர்.

பரீட்சிக்குந் திறமை

இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங் கண்டு சென்னை சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் இவ்வண்ணம் அத்தொழில் புரியுமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிடத்து இரக்கமுங்காட்டியே வந்தனர். சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்ப்பரீட்சைக் கர்த்தர்களாயிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாவாரல்லர். இவர் பரீட்சை வினாக்களெல்லாம் மாணாக்கரது நுட்பமதியைப் புலப்படுத்துவனவாம். மாணாக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்தகால வளவறிந்தும் வினாப்பத்திரிகை, கொடுக்கும் பரீட்சாதிகாரியை யிழந்த தமிழ் மாணாக்கரின் துரதிர்ஷ்டத்தை யென்னென்பேம்! இத்துணை நலம்வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுள் ஒருவராகவுமிருந்தனர்.

நூலாசிரியத் தன்மை

பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்களேயாகத் தாமே புனைந்தியற்றியன கட்டளைக்கலித்துறை என்னுமோர் இலக்கண

நூலும், வசனசூளாமணி யென்னுமோர் உரை நடைநூலும், சைவமகத்துவ போதம் என்னுமொரு சைவ சமய நூலும் ஆறும் வாசக புத்தகம் ஏழாம்வாசக புத்தகம் என்னும் கல்வியறிவிற் றேரும் இளஞ்சிறுர்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவு மாம். இவரது உரைநடை செந்தமிழ்த் திரி சொற்கள் மலிந்து சொல் லடுக்கும் பத சாலங்களும் இயைந்து கட்டுரைச் சுவை நயங்காட்டி இயல்வது. இவ்வியல்பு பற்றியன்றே இவர் தம் வசன சூளாமணி பிரதமகலா பரீட்சைப் பாடமா யேற்பட் டதூஉமென்க.

ஒழுக்கம்

இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண் ணினேரும் பல திறத்தினர். தென்னுடெங்கும் இவரை யறியா தார் எவருமில்லை. இவர் உண்மை தோன்ற வாதஞ் செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக வில கிப் பேசியும் ஒழுகுறு மியல்புடைய சில போலிமாக்கள் போலாது எப்பொழுதும் நடுவு நிலைமை குன்றுதவாறு நடந்து வந்த நற்றமிழாளர். தவறுநர் நண்பரேயாயினும் நொதுமல ரேயாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாசாரியரவர் களும் நண்பர்களேயாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர் வன்மை கண்டு அழுக்காற டையும் புன்மக்கள் போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னுரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழிகிவந்தவர். அந்தோ! இத்த கைய அன்புடை யண்ணலை இழந்த தமிழ் வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்ப தொருதலே.

பட்டப் பேறு

நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக் கியதை கண்டுழியெல்லாம் கவனித்துத் தக்க பட்டமளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளையவர்கட்கும் ருவ்

பகதூர் என்ற பட்டத்தினை 1895- ஆம் வருஷத்தில் அளித்தார்கள்; அஃதன்றியும் தமக்குத் தமிழ்மொழியின்கண் ஐயப்பாடு நேர்ந்துழியெல்லாம் அவரிடங் கேட்டுந் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனத்தார்க்கே யன்றிப் பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். எனவே, இவர் வாய்மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

இறுதிக் காலம்

இவரது தேகசௌக்கியம் 1888-ம் வருடம் நிகழ்ந்த புத்திரசோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறு மாதமாக மார்புநோய் கண்டு வைத்தியநூல் வல்ல பலருதவிசெய்துஞ் செவ்வைப்படாது போயிற்று. ஆகவே நற்குணமும் நேரிய வாழ்க்கையுமுடையவரும் செந்தமிழ்ப் புலவரும் பல தமிழ்நூற் பதிப்பாசிரியரும், சென்னைச் சர்வகலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வகலாசாலையவயவிகளுளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதரவாயிருந்தவரும்; நாவலர் நண்பரும், எம்மீது ஆர்வமுடையாரும், எம்மைத் திராவிடசாஸ்திரி யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலகினின்றும் நீங்கினர். இத்தகைய புலவர் கோமான் இறந்துபட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறும் இற்றென எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்துபாடு தமிழுலகம் செய்த பாவமோ? தேவர் தந்நயம்பற்றிச் செய்த கொடுமாயமோ? அறியேம்.

இனிக் காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம் பயவாது தாமே யழியும் மலர்கள் போலப் பல தமிழ் வித்வான்கள் உலகில் வெளிப் போதராது காலஞ்சென்றனர். அன்னார் கதி மிகவு மிரங்கத்தக்கதே. இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளையவர்கள் பலநூல்கள் அச்சிட்டும் சிலநூல்க ளியற்றியும் பலரோ டளவளாவியுமிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவரும் உணர்ந்ததே.

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
ஞமோத்து செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்.

—ஞானபோதினி.

கொடுக்கூர் கோவிந்தன்

[திரு காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் B. A]

(௩௩௩-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குள் யாரோ ஒருவன் கத்தி கொண்டு அவனைக் குத்தினன். குத்தின கையை முனியன் இறுக்கிப் பிடித்து ஒரு முறுக்கு முறுக்கினன். கத்தி கீழே விழுந்தது. கத்தி வைத்திருந்தவன் அடி வயிற்றில் ஓங்கி ஒரு உதை விட்டான் பரட்டை. இதைக் கண்ட மற்றொருவன் தன் கையிலிருந்த கத்தியால் பரட்டையைக் குத்த ஓங்கினன். பட்டக்காரன் பொறிதட்டுவதுபோல் அவனது மோவாய்க் கட்டையை நோக்கி ஒரு குத்து விட்டான். கத்தி யொரு புறமும் அவனொரு புறமுமாகப் போய் விழுந்தார்கள்.

"சரி, இப்படியே வாருங்கள் உடனே" என்றான் தம்மண்ணன்.

நான்கு உண்மையான வீரர்களும் தத்தம் கைத்துப்பாக்கிகளை வெளியில் எடுத்துக்கொண்டு வேகமாக முன் சென்றனர். பரட்டை வாயில் நுரைதள்ள பல்லை நெறு நெறுவெனக் கடித்துக்கொண்டே பின் சென்றான்.

காசிக்கும் தம்மண்ணனுக்கும் இக்கூட்டம் வெளியே செல்வதற்குள் அதனுட் புகுந்து குழப்பம் உண்டாக்கிச் சம்புலிங்கத்தை விடுவித்தால்தான் விடுவித்தது என்ற ஒரே வழிதான் புலப்பட்டது. போலீஸ் வீரர்கள் நந்தவனத்தை விட்டு வெளியேறி விட்டால் சிறைக்கூடம் மிகவும் அண்மையில்தான் இருக்கிற தென்பதையும், பொதுச் சாலையில் போலீஸ் வீரர்

களுடன் சண்டை செய்து வெற்றி பெறுவது அரிது என்பதை யும் அவர்கள் அறிவார்கள். ஆகையால் இச் சமயம் தவறினல் மறு சமயம் வாய்க்காது என உணர்ந்தவர்களாய் இவ்வாறு ஓடினர்.

கூட்டம் மேற்புற வாயிலுள் நுழைந்து வெளியே செல் லும் தறுவாயில் காசி கூட்டத்திற்குட் புகுந்து சம்புலிங்க மிருந்த இடத்தருகே வந்துவிட்டான். இதற்குள் ஒருவாறு கூட்டமுங் கலைய ஆரம்பித்து விட்டது. எஞ்சி நின்றவர்களின் பெரும்பகுதியினர் தன் முயற்சிக்குக் கைகொடுப்பார்கள் என நம்பினன் காசி. ஆகவே "இதுதான் சமயம் ஓடிவாருங்கள் சூழ்ந்துகொள்ளுங்கள், எங்கே, ஒரு மூச்சு!" என்று தன் தோழர்களை நோக்கிக் கூவினன். கைத்துப்பாக்கிகளை நேரே நீட்டியவர்களாய்த் தம்மண்ணன் முனியன் பட்டக்காரன் முதலியவர்கள் சம்புலிங்கமிருந்த இடத்தைச் சூழ்ந்துகொண் டார்கள். பரட்டை வரிந்து கட்டிக்கொண்டு பல்லை நெறு நெறுவெனக் கடித்தவனய்ப் போலீஸ் புலி கோவிந்தசாமி நாயுடுவை நெருங்கினன். ஆயிற்று, அவன் நாயுடுகாருவைத் தாக்கப்போகிற அதே விநாடியில் சம்புலிங்கத்தைத் தூக்கிச் செல்கிற உடையணியாத போலீஸ் வீரர்களைச் சுட்டுத் தள்ளிச் சம்புலிங்கத்தைத் தாங்கள் தூக்கிக்கொண்டு ஓடிவிட வேண்டி யதுதான். ஆகவே வெற்றி இவ்வளவு எளிதில் கைகூடுவ தாகத் தோன்றிய அச்சமயத்தில் எதிரே சற்று தூரத்தில் கவர்னருடைய மெய்காவற் குதிரைப்படை வந்துகொண் டிருந்தது தெரிந்தது.

"அரசனுணை, தளகர்த்தரே சற்று உதவிசெய்யுங்கள். நான் போலீஸ்புலி கோவிந்தசாமி நாயுடு. இதோ வழிப்பறிக் கொள்ளைக்காரனை சம்புலிங்கத்தைப் பிடித்துச் சிறைக்கு எடுத்துச் செல்கிறேன். அவனைத் தப்புவிக்க அவனுடைய தோழர்கள் எங்களை எதிர்க்கின்றனர். ஆகையால் உதவி செய்யுங்கள், உடனே உதவி செய்யுங்கள்" என்று நாயுடுகாரு கூவினர்.

கூவி முடிவதற்குள் பரட்டை அவரைத் தரையிலிருந்து நாலைந்தடி உயரம் மேலே தூக்கி விட்டான். ஆனால் இதற்குள் குதிரைப்படை விரைவாக இவர்களிருந்த விடத்தை நெருங்கு வதைக் கண்டு எங்கே குதிரைகள் மிதித்து விடுமோவென அஞ் சிக் கும்பலாயிருந்த மக்கள் கலைந்தோடத் தொடங்கினர். அப் படி யோடியவர்கள் முனியன் மீதும் பட்டக்காரன் மீதும் விழுந்தோடியதால் அவர்கள் தன்னுண்டு இருந்த இடத்தை விட்டு அப்பால் செல்லவேண்டிய தாயிற்று. ஆனால் தம்மண் ணனும் காசியும் சம்புலிங்கமிருந்த இடத்தை யணுகிவிட்டார் கள். சம்புலிங்கமோ இன்னும் உணர்வற்றவனாகவே வீரர்கள் கைகளிற் கட்டுண்டு கிடந்தான். அவர்களை யிடித்துத் தள்ளி விட்டு அவனைக் கைப்பற்றிக்கொண்டாற்கூட எப்படி அத் துணைக் குதிரை வீரர்களையு மீறி இருவராகத் தூக்கிச் செல்ல முடியுமென்று காசிக்குப் புலப்படவில்லை. திகைப்புண்டு சற் றுத் தயங்கினான்.

ஆ! அச்சிறிது தயங்கிய நேரமே அவன் கோரிக்கையைச் சிதைத்ததாகும்! அந்நேரத்தில் சம்புலிங்கத்தை மீட்டிருந்தால் மீட்டதுதான். அது தவறிவிட்டது!

குதிரைப்படைத் தளகர்த்தர் கும்பலைக் கலைத்துத் துரத் தும்படி கட்டளையிட்டு விட்டார். பரட்டை நாயுடுகாரைக் கீழே போட்டுவிட்டு ஓடினான். காசியும் தம்மண்ணனுங்கூட ஒதுங்கிச்செல்லும்படியாய் விட்டது. சரி, இனி நாமாவது தப்பிச் சென்று பின்னால் தலைவனைச் சிறைமீட்க முயலவேண்டி யதுதான் என்று முடிவு கட்டியவர்களாய் மூலைக் கொருவராய் ஓடி விட்டார்கள்.

இவ்வாறு ஓடியவர்களைப் பிடிக்க வேண்டுமென்ற எண் ணமே நாயுடுகாருவுக்கு எழவில்லை. குதிரைப் படைத் தள கர்த்தருக்கோ அவர்களைப் பிடிக்கவேண்டிய வேலை கிடை யாது. தன் உயர்ந்த குதிரைமீதமர்ந்தவராய்த் தளகர்த்தர் கட்டுண்டு கிடந்த சம்புலிங்கத்தைச் சுற்றுநேரம் உற்று நோக்கி னார். நோக்கி விட்டு,

"ஓகோ, இவன்தானு பெயர்போன சம்புலிங்கம்? இவ்வளவு கண்ணியமான தோற்றத்தை யுடையவனு யிருப்பானென்று நான் கனவிலுங் கருதவில்லையே" என்ருர்.

"கண்ணியமான தோற்றமுடையவனு யிருந்தாலென்ன, இல்லாவிட்டா லென்ன? தொழிலென்னவோ வழிப்பறிதான். இப்பொழுதும் விட்டுவிட்டால் மூடிச்சவிக்கப் போய்விடுவான் நேரே" என்ருர் நாயுடுகாரு.

"இருக்கலாம், அப்படி யிருந்தால் கயிற்று முனையில் தொங்க வேண்டியதுதான். இருந்தாலும் அவனைப் பார்த்தால் அத்தொழிலைச் செய்பவன்போல் ஒரு சிறிதுகூடத் தோற்ற மில்லை" என்று கூறினுர் தளகர்த்தர்.

இவர் இவ்வாறு கூறியதை ஒத்துக் கொண்டவர்கள் போலக் குதிரைப் படையிலிருந்த பல வீரர்கள் தலைகளை யசைத்தனர். சம்புலிங்கம் என்பவனைப் பற்றி அவர்கள் பன்முறை கேட்டிருக்கின்ருர்கள்.

"தளகர்த்தரே, எனக்குச் சமயத்தில் உதவி யளித்ததற்கு நான் நன்றி யறிதலுள்ளவனு யிருக்கிறேன்" என்று நாயுடு காரு பணிவுடன் கூறினுர்.

"என் கடமையை நான் செய்தேன் அவ்வளவு தான்" என்று கூறிவிட்டுத் தளகர்த்தர் தன் படையைச் செல்லுமாறு ஏவினுர்.

படை வீரர்களும் புறப்பட்டிருப்பார்கள்.

ஆனல் "ஐயோ, அரசனுணே, எங்களைச் சிறைச்சாலை வரையிற் கொண்டுபோய்விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால் இடையில் என்ன நேருமோ சொல்லமுடியாது" என்று நாயுடு காரு படபடத்துக் கூறினுர்.

தளகர்த்தரின் முகம் சிவந்து விட்டது; அவ்வேலை அவருக்குப் பிடிக்கவில்லை; ஆயினும் "அரசனுணை" யென்று கட்டளை வந்த பின் என் செய்வார்?

"சிறைக்கூடம் வரையில் துணை செல்லுங்கள்" என்று கட்டளையிட்டார்:

ஆகவே இவ்வாறு குதிரைப்படை வீரர்கள் தன்னைச் சூழ்ந்து வர வழிப்பறிக் கொள்ளைச் சிங்கமாகிய சம்புலிங்கம் சிறைக்கூடம் சென்றடைந்தான்.

ஆயினும் இவ்வாறு வந்ததும், சிறையை அடைந்ததும் அவனுக்கு அப்பொழுது தெரியாது.

ஐந்தாங் கூறு

சிறைக்கூடம்

தன்னுணர்வு பெற்று எழுந்தபோது, சம்புலிங்கம் ஒரு சிறு அறையில் கோரைப்பா யொன்றின்மீது தான் படுத்திருக்கக் கண்டான். அறையோ ஒரே இருளாக இருந்ததென்றே கூறவேண்டும். ஒருமூலையிற் கிடத்தப்பட்டிருந்த தனது சிறைத் தோழரென்று கொள்ளவேண்டிய ஒரு கிழவரதுமுகம் சரிவரத் தெரியாதபடி அத்துணை இருளாக விருந்தது.

ஒரு கணநேரம் தான் எங்கிருப்பது என்றே சம்புலிங்கத்திற்குத் தெரியவில்லை. ஒருகண நேரந்தான்! எவ்வாறு அவ்விடத்திற்கு வரநேர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் இருக்குமிடம் பெயர்போன சென்னைச் சிறைச்சாலை யென்பதை விரைவிற் கண்டுகொண்டான்.

கைகால்களிற் செந்நீரோட்டம் தடைப்பட்டு அவைகள் மரமாக இருந்தன. அன்றியும் அவைகள் கயிற்றினல் கட்டப்பட்டிருந்து அப்பொழுதுதான் அவிழ்க்கப்பட்டிருந்தாற் போன்றும் தோன்றின. தலையிலோ சிறுவலி யிருந்தது.

இந்நிலையில் யாரோ திணறலுடன் பெருமூச்சு விட்டது போலிருந்தது. அறையின் மூலையிலிருந்த கிழவர் பேசினர் போலும். "ஐயா, நீர் யார்? இத்துணை காலமாக வாய்ப்பேச்சிற்குக்கூட ஆளில்லாமல் தனியே விடப்பட்டிருந்ததால் என் மூளை கலங்கிவிடுமென்றே நானஞ்சியிருந்தேன். திடீரென்று இப்பொழுது ஒருவரை யெனக்குத் துணையாக அனுப்பியிருக்

கிருர்கள். அவரைப் பார்த்தாலோ இந்த இடத்திற்கு வரக் கூடியவர்கள் இனத்தையே சேர்ந்தவர்போற் ருேன்றவில்லை'' என்று அவர் மெல்லிய குரலிற் கூறினர். பேச்சிலிருந்தே அவர் கல்வியறிவு வாய்ந்தவரென்றும் செம்மையுளம் படைத் தவரென்றும் சம்புலிங்கத்திற்கு விளங்கியது.

"நான் சம்புலிங்கம்'' என்று விடையிறுத்தான். பெயரை மாற்றிக் கூறவோ அல்லது கூற மறுக்கவோ ஏதொன்றுங் காணவில்லை யாகலின்.

"யார் சம்புலிங்கமா, வழிப்பறிக் கூட்டத் தலைவனுன சம்பு லிங்கமா? இருந்தாலும் நீர் பெருந்தன்மை வாய்ந்தவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் ஏதாவது கெடுதல்கள் செய் திருந்தாலும் அவைகளைப்பற்றி எனக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை. நண்பரே, நீர் இவ்விடத்திலேயே இருக்க இசையமாட்டீர் என்பதை யறிவேனுதலால் நீர் இங்கு வந்து சேர்ந்ததைப்பற்றி உவகை பூத்தேன் என்று சொல்வதற் கில்லை. ஆயினும் நீர் இப்பொழுது இங்கு வந்தது ஒருவகையில் நல்லதே. தெருநாயைப்போற் கேட்பாரற்றுத் தனிமையில் இவ்வறையில் நான் இறந்துகிடக்க வேண்டியதில்லை'' என்று கூறினர் முதியோர்.

"இறந்துகிடப்பதா? நீராவது இறப்பதாவது? இன்னும் பத்தாண்டுகளாவது உயிருடன் இருக்கப்போகிறீர்'' என்று கூறிக்கொண்டே சம்புலிங்கம் எழுந்து பெரியவரருகிற் சென்று பார்த்தபோது அவர் கூறியதுதான் உண்மையென்று கண்டுகொண்டான்.

கிழவர் மிகவும் வயதேறியவராகக் காணப்பட்டார். முகம், தலைமயிரைப்போல் வெளுத்துத் தோன்றிற்று. ஒரு சிறிது முளைத்திருந்த வெண்ணிற மீசைகளையுந் தாடியையும் அவர் அடிக்கடித் தன்கைகளால் தடவும்போதெல்லாம் அவர் முகத்தில் கலக்கமுண்டாயிற்று. நெடுநாள் அவர் தாடி மீசை களை வைத்துக்கொண் டிருந்திருக்க வேண்டுமென்றும், வழக் கம்போல் அவர் இப்பொழுதும் தடவும்போது அவைகளு.

நீக்கப்பட்டிருந்தமை யுணர்ந்ததும், என் :யாரால் அவைகள் அவ்வாறு நீக்கப்பட்டன வென்று அறியாமற் கலக்கமுறுகிறார் என்றும் ஊகித்துக் கொண்டான்: அவருடைய கண்கள் ஒரு சிறிது நெருக்கமாயும், மூக்கின் தண்டு உயர்ந்தும் தோன்றி னும் முகம் தெளிவாகவே காணப்பட்டது. எவ்வுயிருக்கும் வேண்டுமென்றே தீங்கு செய்யாத உள்ளம் படைத்தவ ரென்றும், வாக்கு வன்மையினால் அவர் வயிறு பிழைத்திருக்க வேண்டுமென்றும் ஊகித்துணர்ந்தான்.

ஆகவே அன்புடன் அவரது கைகளைப் பிடித்தவனாய் "நண்பரே நான் என் பெயரைக் கூறிவிட்டேன். உம்மு டைய பெயர் என்னவென்று நான் அறியலாமா?" என்று வினவினான்.

"பீதாம்பர யோகி யென்றுதான் என்னை எல்லோரும் அழைப்பார்கள். என் இயற்பெயர் எதுவாயிருந்தாலும் அதைக் கூறினால் ஒருவரு மறியார்களாகையாற் கூறவில்லை" என்றார் பெரியவர்.

பெயரைக்கேட்ட சம்புலிங்கம் திடுக்கிட்டான். நந்த வனப் பாதையில் தாடிக்காரியின் கொட்டகையையடுத்து ஒரு பீதாம்பர யோகியார் கொட்டகை அமைக்கப்பட்டிருந்த தென்பதை அவன் மறக்கவில்லை. ஆயினும் அக்கொட்டகைக் கும் தன் தலையின் பின்புறத்திற் பட்டிருந்த அடிக்கும் கொடுக் கூர் கோவிந்தனுக்கும் தொடர்பிருக்க வேண்டுமென்பதை அவன் அப்பொழுது கண்டுகொள்ள முடியவில்லை. நுங்கம்பாக்கத் தருகில் அன்றிரவு நீண்ட மூக்கோடு கூடிய முகமூடியணிந்த குதிரைவீரனைப் பார்த்திருந்துங் கூடக் கோவிந்தன் இன்னும் சிறையில்தான் இருக்கவேண்டுமென அவன் எண்ணிக்கொண் டிருந்தான்.

கிழவரது கை நாடியைப் பார்த்தான் சம்புலிங்கம். விரை வில் அவர் இவ்வுலக வாழ்க்கையை நீத்து விடுவா ரென்றே தோற்றிற்று. வேளா வேளைக்குச் சரியான உணவளிக்கப் பட்டு வந்திருந்தால் அவர் ஒருகால் இன்னுஞ் சில நாள் பிழைத்

திருக்கக் கூடும். சிறையில் அக்காலத்திற் சரியான உணவேது? பிணிக்கு மருந்தேது ?

"ஏன், என் பெயரை நீ கேட்டதில்லையா !" என்று வினவினார் பெரியவர்.

சம்பு :—" கேட்டிருக்கிறேன். நீ எவருக்குங் கேடிழைத்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. ஏதோ பிற்காலத்தில் இன்னின்னது வரப்போகிற தென்று கேட்பவர்கட்குக் கூறி வயிறு பிழைப்பவர்கள் இன்னும் எத்துணையோரில்லை ? அப்பிழைப்பு வேறு பல பிழைப்புகளை விட எவ்வளவோ மேலானது. ஆயினும் என்னிடம் வந்து 'நான் குறி சொல்லுவதில் மிகவும் கெட்டிக் காரன் : என் குறி தவறாது' என்று பெருமை பாராட்டிக் கொள்வீரானால் நான் அதை எள்ளளவும் பொருட்படுத்த மாட்டே னென்பதை மட்டுந் திட்டமாய் நினைத்துக் கொள்ளும் ?

பீதாம் :—" ஐயோ, இறக்கப் போகும் இத் தறுவாயிலா நான் இந்திரன் சந்திரன் என்று என்னைப் பற்றிப் புகழ்ந்து கொள்ளப் போகிறேன் ? இல்லை, யில்லை. உண்மையிலேயே மந்திரமோ, மறை மொழியோ யாதொன்றும் நானறியேன். சிறிது தெரிந்தவன்போல் பகடியடித்தது உண்மைதான். ஆயினும் அதனால் பிறர்க்கு எவ்வித தீங்கு மிழைத்ததில்லை. என் தொழில் முறையிற் பிறர் நெஞ்சு புண் படும்படியான செய்திகளை நான் கூறியதே கிடையாது. ஆனால் வரப்போகிற நன்மைகளை மட்டும் ஒன்றிரண்டாகப் பிறரிடம் புளுகி நிறையப் பொருளீட்டி வந்தேன். ஏமாந்து பொருள் கொடுத்தவர்கள் பணக்காரர்களே. ஆகையால் அவர்களுக்கு அதனால் ஒன்றும் பெருங்கேடு விளைந்து விடாது. என்னை நம்பி இரண்டு மூன்று உறவினர்கள் உயிர்வாழ வேண்டியதாக விருந்தமையால் அவ்வழி யீட்டிய பொருளைத் தவறென்று நான் கருதவில்லை."

இதைக் கூறி முடிப்பதற்குள் கிழவருக்குப் பெரு மூச்சு வாங்கிற்று. கிழவர் உண்மையையே கூறுகின்றார் என்று கண்டு கொண்ட சம்புலிங்கத்திற்கு அவரிடம் அன்பு சுரந்தது.

ஆகா, இவர் பெயரை வைத்துக் கொண்டல்லவோ எவ ேனா ஒரு தப்பிலிப் பையல் ஊரை ஏமாற்றி வருகிறான்! அவன் யார்?

சம்புலிங்கத்திற்கு ஐயந் தெளியவில்லை. ஆயினும் அப் போலி யோகியாராற்றான், திவான் பகதூர் முதலியாரையும் போலீஸ் வீரர்களையும் அலைக்கழிக்கத் தான் எடுத்த சூழ்ச்சி இடை முறிவுற்றது என்று மட்டும் உணர்ந்துகொண்டான்.

"நண்பரே இனி மிகுதியாகப் பேசாமல் அமைதியாகப் படுத்துக் கொள்ளும். என்னாலியன்ற உதவியை மட்டும் நான் செய்யப் பின்வாங்க மாட்டேனென்பதை நம்பும்" என்று அன்புடன் மொழிந்தான் சம்புலிங்கம்.

முதியவரும் களைத்துப் படுத்தார். கையில் ஒரு அகப் பைக் கேழ்வரகுக் களியும் ஒரு குடுவையில் தண்ணீருங் கொண்டு காவற்காரன் உள் நுழைந்தான். அவனது மடித்த கையினின்றுந் தொங்கிக்கொண் டிருந்த விளக்கின் ஒளியில் சம்புலிங்கம் முதியவரது முகத்தை உற்றுப் பார்த்தான். சவக் களை தோன்றிற்று. (தொடரும்)

மெய்ப்பொருணயனார் வரலாறு

[திரு. மூ. பெ. குமரநாயகம் பிள்ளையவர்கள்]

"பற்றுக பற்றற்றான் பற்றினைப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு"
"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை"
"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்"

என்ற பொதுமறைப் பொருள்களையும் "சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நா ளாயே னுன்னை, எங்குற்றாய் என்றபோதால் இங்குற்றேன் என்கண் டாயே"—"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சமயக் கொள்கைகளையும் கடைப் பிடித்தொழுகுவது இயல்வ தொன்றேயாமென உலகினருக்குத் தமது வாழ்நாள் நிகழ்ச்சிகளால் அறிவுறுத்தியருளிய மாண் புடையாரே "மெய்ப்பொருள் நாயனார்" என்றழைக்கப்படுப வர். அச் சீரியரின் வரலாற்றைச் செந்தமிழ் நடையில் எழுத

என்னிலும் சிறந்த அறிஞர் பலரிருப்பினும் ஆசை மேலீட்டில் என் சிற்றறிவுக் கெட்டிய வரையில் எழுதத் துணிந்தேன். இச் சிறியேன் வழுக்களைக் கண்ணுறும் ஆன்றோர் அருள்கொண்டு அவற்றைப் பொறுப்பதுடன் தங்களது செவ்விய ஆற்றல் தோன்றஅச்சரிதையை எழுதி எல்லோரும் துய்க்குமாறு செய்ய வும் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். அறிஞர் அறிவுரைகள் வெளிவர இஃது ஓர் துண்டுகோ லென்பதே தமியேன் கருத்து.

வரலாறு

சேதி நன்னாட்டிலே, திருக்கோவலூரிலே, மலாடர்களுக் குத் தலைவராயும், முழுமுதற் கடவுளிடத்தும் அவன் அடி யாரிடத்தும் மெய்யான உழுவலன்புடையவராயும், தாம் உயிர் வாழ்வ தெல்லாம் மெய்யடியார் பணி செய்வதற் கென வே கருதினவராயும் இறைவர் ஒருவரிருந்தார். அவர் மன, மெய், மொழிகளால் ஆகக் கூடிய எல்லாவற்றையும் மெய்ப் பொருளிடத்தும் மெய்யடியாரிடத்தும் செலுத்தி வந்தமை யின் மெய்ப் பொருள் நாயனூர் என்று போற்றப்பட்டார். அவர் மநு முறை கண்ட சோழனே போன்று, மன்னுயிருக் குத் தன்னாலும், தன்னை அண்மி யுள்ளோராலும் (பரிசனங் களாலும்) பகையோராலும், கள்வராலும், கொடிய விலங்கினங் களாலும் துன்பம் விளையாவகை காத்து, முப்பானிரு அறங் களையும் ஓம்பிவந்தார்; அதுவேயின்றிச் சிவபெருமான் எழுந்த ருளியுள்ள திருக்கோயில்களெங்கும் விதிப்படி பூசை ஆற்று வித்தல்: மறை ஓதுவித்தல், அங்ஙனம் ஓதுகையில் உண்டாகும் உவகையால் விளையும் திருக்கூத்து முதலியன செவ்விதில் நடந் தேற வேண்டிய ஒழுங்குகள் பலவும் திட்டம் செய்து மிருந் தார். இதுவேயன்றி, அவர், திருத் தொண்டர்களது பொருள்களைக் காத்து அவர்கள் விழையும் போது கொடுக்க வே கடமைப் பட்டவரெனத் தம்மை நினைந்து தமது பொருள்களை யெல்லாம் இறை பணியாளர் இச்சைப் படியே ஈந்து உளமகிழ்வாராயினர்.

இவ்வாறு மறம் கடிந்து அறம் வளர்க்கும் அரையனை வெற்றி கொள்ளக் கருதிய முத்திநாத னென்பான் பன்முறை

அவரைப் போரில் எதிர்ந்தனன்! "வேலன்று வென்றி தருவது மன்னவன் கோல்தூஉங் கோடா தெனின்" என்றமை வாய்மையாகலின் எதிர்ந்தபோ தெல்லாம் மெய்ப்பொருளாருக்குத் தான் புறங் காட்டி யோடியதோடும் தனது நால்வகைப் படைகளையும் இழந்தும் வந்தான். முடிவில் அவரைப் போரில் வெல்ல இயலாதென நன்குணர்ந்து தான் வெற்றி பெற ஓர் சூழ்ச்சியை நினைந்திருந்தான். நீண்டபொழுது சிந்தித்து ஓர் அல்வழி கண்டு அதன்வழித் தன் கருத்தை முற்றுவிக்க முன் வந்தான். மெய்ப்பொருளாரது திருநீற்றின் பற்றினையும் அடியார் பற்றினையுமே துணையாக் கொண்டு தான் திருநீறு கண்மணி முதலியவை பூண்டு உச்சியில் சடைமுடி போட்டுக் கொண்டு சிவவேடம் தாங்கிப் புத்தகம் போன்ற வெளித் தோற்ற முடைய நாந்தக மொன்றைக் கையி லெடுத்துக் கொண்டு, மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கருப்பு வைத்தோன் சேதிபர் திருமாளிகையை யடைந்தான். ஆங்குள்ள வாயில் காப்பாளர் உண்மைத் தொண்டரென மயங்கி உச்சியில் கைகளேற்றி உள்ளே செல்ல விடுத்தனர். மன்னன் துயில் கொள்ளுமிடம் நெருங்கு மளவில் தத்த னென்பான் தடை செய்ய, மெய்நூலின் பொருளை மன்னர்க்கு அறிவுறுத்துவான் செல்லும் தன்னை தடை செய்தலும் தொடர்ந்து வரலும் கூடாதெனப் பொய்தவன் கூறத் தத்தனும் வாளா நின்றனன். கொடியன் கூசாது அடுத்து வருகின்றமையைக் கண்ட கோமாட்டி நாண் கொண்டு, இமைக்குமுன் கீழ் எழுந்து நின்று வண்டலர் மாலையாரை எழுப்புதலும், துயிலுணர்ந்து எம்பிரான் அன்பரெனக் கொண்டமையின், சிரமேற்குவித்த கைகளுடன் எதிர் சென்று போற்றி, "இங்கெழுந்தருளப் பெற்ற தென் கொலோ" என்றனர். கைதவனே ஆக்க நன்மொழி கூறுவான் போன்று துவங்கி நானிலம் முழுமையும் துருவினும் எய்தப் பெறுததும் எப்பெருமானால் திருவாய் மலர்ந்தருளப் பட்டதுமான சிவ வழி பாட்டு முறை விளக்கம் (சிவாகமம்) கொண்டு வந்துள்ளதாய்ச் சொல்லி முடித்தான். கேட்டவர் தாம் பெறும் பேறு வேறின் றெனக்

கருதி அம் மெய்யறிவு நூலின் பொருளை விளக்குமாறு அத் தீயோனைக் குறையிரந்தனர்: அவனே இசைந்தமை காட்டி வேறு ஒருவரும் அவணுகாதென மலாடர் தலைவர் தலைவியை அப்பால் போகுமாறு குறிப்பால் உணர்த்திப் பின் திருநீங்கி ஞனைத் தவிசின்மீது இருத்தித் தாம் படிமீதிருந்து "திருவருள் செய்பு" மென்று சென்னியை நிலத்தில் தாழ்த்துதலும் புத்தக மவிழ்ப்பான்போன்று பத்திரம் வாங்கி வஞ்சகன் முன் நினைந்த அப் பரிசே செய்தனன். ஆயினும் பெருந்தகையார் மெய்ப் பொருள் வேடமே மெய்ப் பொருள் எனத் தொழுது வென்றார்.

கரவு நெஞ்சுடைக் கயவன் உள் சென்ற பொழுதே தன் கருத்து முற்றிலும் அவண் செலுத்திய தத்தன் கடிதிற் சென்று செந்நீர் ஒழுக வீழும் ஏந்தலை ஏந்தி அத் தீங்கிழைத்த பொறை யிலியை வதைக்க முயன்றனன். கண்ட சேதிவள்ளலார் தடுத்து ஈசனடியார் எவ்வித ஊறு மின்றித் தமதிடம் செல்ல நீ துணை நிற்பாய் எனக் கட்டளை யிட்டார். ஆணையை முற்று விப்பான் தத்தனும் பொய்தவனுக்கு மெய்காவலனாய் அவ னுடன் தொடர்ந்து சென்றனன். வழியில் இறைவனை வருத்திய முத்தி நாதனை முடித்துவிட முன் வந்த குடிபடைகள் கொற்ற வனது குறிப்புணர்ந்து அஞ்சி யகன்றனர். தத்தனும் வெவ் வினைக் கொடியோனை அவனது இருக்கை சேர்த்து மீண் டனன். இகலோன் இடரின்றி யிருப்பிட மெய்திய சேதி கேட்பான் உயிர் தாங்கிக் கொண்டிருக்கும் இறை முன் தத் தன் சென்று பணிந்து பணித்தவாறு முடித்தமை உரைத் தனன்; காவலர் களிபேறுவகை பூத்து "இன்றெனக் கையன் செய்த தார்செய்ய வல்லார்" என்று தத்தன்பால், மிகு நன்றி காட்டினார்.

பின்னர், மனைவி, மக்கள், அமைச்சர் முதலியோருக்குத் திரு நீற்றின் பயனை அறிவுறுத்தித் தில்லைக் கூத்தனை நினைத் தலும், நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்ட மன்றுளாடி, அவர் கருதியவாறே, எதிர் தோன்றி, மாலயனும் கனவிலும்

நண்ணுதற் கரிய தனது திருவடி நிழலின் கீழ் என்றும் வணங்கி யின்புறும் பேற்றை அருளிச் சென்றான்.

இவ் வரும் பெரும் மாண்பு வாய்ந்த மெய்ப் பொருள் நாயனார் இறையுடன் இரண்டறக் கலந்தது கார்த்திகைத் திங்கள் உத்திர நாளாகையால், அன்று சைவ சமயிகள் எல்லாம் தம்மாலியன்ற வரை அவரது குருபூசை நடத்தி "குரு பூசை நாளிற் குறைவிலா திவர்க்கு, வருபூசை தந்தேன் மாநிலத் தோங்கித், தவப்பய னெய்திச் சதுமறைக் கிரியிற், சிவ கதி யடைத றிண்ணமுண் மையதோ" என்றமைக்கு இலக்காகத் திருவருள் அருளுமாறு இறைஞ்சுகின்றேன்.

ஆங்கிலரின் பெருமுயற்சி

தமிழ்மக்கள் கவனிக்க.

[திரு M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

[ஆங்கில நாட்டிலுள்ள பொருட் காட்சி நிலயத்தில், உலகத்திலேயே இதுகாறு மில்லாத மாபெரும் புத்தகப்பட்டியொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. அம்முயற்சிக்கு நிதி திரட்டப் பொது மக்களின் பண உதவியை நாடி, சுற்றுக் கடிதமொன்று அந்நிலயத்தார் விடுத்துளர். அங்ஙனஞ் செய்தது பொருந்தாது. அரசாங்கத்தாரே பொருளுதவி செய்தல் வேண்டும் என்று ஒருசிலர் மறுப்புரை கூறியதால், அந்நிலயத் தலைவர் **சர் பிரடரிக் கேனியன்** என்பார், தம் சுற்றுக்கடிதத்தை ஆதரித்து, நடைபெறும் பெரு முயற்சியை விளக்கி யுள்ளார். ஆங்கிலர் தந் தாய்மொழி வளர்ச்சியை முன்னிட்டுச் செய்து வரும் இப்பெருங் கருமம், நந் தமிழ் மக்களுக்கு ஊக்க மளிக்குமெனநம்பி, ஈண்டு அவ்விளக்கத்தை மொழிபெயர்த்துள்ளோம்.]

*

உலகத்திலே பெரிய நூல் நிலையம் ஆங்கில நாட்டிலேயே உளது. அத்தகைய நிலயத்துக்கு உலகத்திலேயே பெரியதா

யுள்ள புத்தகப்பட்டி அமைக்கப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. அம் முயற்சி முடிவு பெறப் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் பிடிக்கும். ஒவ்வொரு இதழிலும் இரண்டு வரிசை கொண்ட 500-பக்க முள்ள 165-தொகுதிகளாய்ப் புத்தகப்பட்டிகள் அமைக்க முயன்று வருகிறார்கள். முதல் புத்தகப்பட்டி 1787-ஆம் ஆண்டில் இரண்டு தொகுதிகளாய் ஏற்பட்டது. 1813-லிருந்து 1819 வரை ஏழு தொகுதிகளடங்கிய புதிய பட்டியொன்று அமைக்கப்பட்டது. 1841ஆம் ஆண்டில் பிறிதொன்று ஏற்பட்டது. ஆனால் அத் தொகுதி சரியாய் அமைக்கப்படவில்லை யாதலின், அதற்கு மேல் அத் தொகுதியை விரித்தெழுதவில்லை.

நூல் நிலயச்சரித்திரத்திலே பெரிய புரட்சியை உண்டுபண்ணியவர் அன்டோனியோ பாணிஜி என்ற இத்தாலியர் ஆவர். அவர் ஆங்கில நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த காலை பால்மர்ஸ்டன் என்ற ஆங்கில முதன் மந்திரியார் அவரை அச்சடித்துள்ள நூல்களின் பாதுகாப்பாளராக நியமித்தார். அவர் தான் ஆங்கில நூல் நிலயத்தை விருத்தி செய்துள்ளார். நூற் பகுப்பாளர்கள் எல்லோரும் பொருட்காட்சி நிலையத்துக்கும் தத்தம் பதிப்புக்களை அனுப்பியாக வேண்டுமென்று வற்புறுத்தும் சட்டத்துக்கு அவர் தான் காரணம். இப்போதுள்ள புத்தகப்பட்டி அவருடைய யோசனையின் பேரில் 1881 முதல் 1899வரை முயற்சி செய்யப்பட்டு அமைக்கப்பட்டதாகும். இது 393 பகுதிகளை யுடையது. இஃது முடிவுபெற்றவுடனேயே உப பகுதிகளும் அமைக்கப்பட நேர்ந்துவிட்டது. 1901 முதல் 1905 வரை 45 பகுதிகள் ஏற்பட்டுவிட்டன.

இப்போது ஆலோசனையிலிருந்து வரும் புத்தகப்பட்டி தற்காலமுள்ள பட்டியை அனுசரித்ததே. ஆனால் சிற்சில மாறுதல்களுடன் அமைக்கப்படும்.

பணவுதவி எத்துணை கிடைக்கிறதோ, அந்த அளவில் தான், இதன் விலையை அமைக்க முடியும். ஆண்டொன்றுக்கு 15 தொகுதிகள் வீதம், 160 முதல் 165 தொகுதிகள் வரை

இப் பட்டி அடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. 400 கையொப்பக்காரர்கள் சேர்ந்து விட்டால், ஒரு பகுதி யொன்றுக்கு 3 பவுன் விலை ஏற்படுத்த முடியும். இவ்வாறு உறுதி கொடுக்கும் நூல் நிலையம் ஆண்டொன்றுக்கு 45 பவுன் விலை கொடுக்க நேரிடும். ஆனால் 400 கையொப்பக்காரர்களில்லா விட்டால் விலையதிகமாகலாம்.

சைவசித்தாந்த சபை—தூத்துக்குடி

இச்சபையின் 46— ஆம் ஆண்டு நிறைவு விழா, நிகழ் டிசம்பர் 28 - 29 ஆம் (மார்கழித் திங்கள் 14 - 15 ஆம்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்கு, சென்னை உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும், சைவசித்தாந்த மகா சமாஜ கௌரவ அமைச்சரும், "சித்தாந்தம்" என்னும் அரிய பத்திரிகையின் ஆசிரியருமாகிய சைவத்திருவாளர் ம. **பாலசுப்பிரமணிய முதலியார் பீ. ஏ. பீ. எல்.** அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம், தமிழ் இலக்கியம், ஒழுக்க முதலிய பொருள்கள் பற்றிய சொற் பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்றியும், சித்தாந்த சைவர்களின் முன்னேற்றம், தமிழ் மொழியின் வளர்ச்சி முதலியவற்றிற் குரிய தீர்மானங்களும் செய்யப்பெறும். அன்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்கவும், சொற் பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் வேண்டுகின்றோம். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு காரியதரிசிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு குறிப்பு

கடந்த ௬-ம் பரல் ௩௪௯-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 'உண்மைநெறி விளக்க ஆசிரியர் உமாபதிசிவாசாரியரா' என்னுங் கட்டுரை திருவாளர் S. **அனவரதவிநாயகம் பிள்ளை** M. A., L. T., அவர்களால் எழுதப்பட்டதாகும். அங்குக் குறியாது விடப்பட்டமையின், இங்குக் குறிக்கப்பட்டது.